VANAVARAYAR
Institute of Agriculture
Enriching India

உழவர்
சிந்தனைக் களஞ்சியம்

மலர் 7 | சிறப்பிதழ் | மார்ச் 2023

# உழவர்
# சிந்தனைக் களஞ்சியம்



- வெற்றிலையின் வெற்றிக் கதை
- கல்வியில் தொடங்கி கலப்பை வரை
- சிகரம் தொடும் சிப்பிகாளான்
- நலம் தரும் நாட்டு சர்க்கரை

விவசாயிகளுடன் ஓர் நேர்காணல் ...

வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனம்
மணக்கடவு, பொள்ளாச்சி - 642 103

VANAVARAYAR
Institute of Agriculture
Enriching India

Ministry of Agriculture
& Farmers Welfare.
Government of India

National Institute of Agricultural
Extension Management

# வேளாண் மற்றும் பொது அறிவியல் பட்டதாரிகளுக்கான 45 நாட்கள் இலவசப் பயிற்சி

## Agri Clinics & Agri Business Centre Scheme
**(மத்திய வேளாண் அமைச்சகத்தின் திட்டம்)**



### கல்வித் தகுதி
வேளாண் மற்றும் பொது அறிவியல் சார்ந்த படிப்புகள்



### வயது
18 முதல் 60 வரை





### வங்கிக்கடன்
5 லட்சம் முதல் 1 கோடி வரை



### மானியம்
பொது பிரிவிற்கு : 36%

பெண்கள் மற்றும் இதர வகுப்பினர் : 44%

### வசதிகள்
இலவச தங்குமிடம், உணவு, பயிற்சி ஏடுகள், தொழில், நிர்வாகம் மற்றும் திட்டமிடும் பயிற்சிகள். ஆராய்ச்சி மற்றும் தொழில் நுட்ப பயிற்சி மையங்களைப் பார்வையிடுதல். வங்கிக்கான திட்ட அறிக்கைகள் தயாரித்து கொடுத்தல்.


**அக்ரி கிளினிக் & அக்ரி பிசினஸ் சென்டர்**
**வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனம்**
மணக்கடவு, பொள்ளாச்சி(தாலுக்கா), கோவை (மாவட்டம்) - 642103
+91 74026 18009, +91 99429 08466 edp@via.ac.in www.via.ac.in






“தன்னை முழுவதுமாக உணர்வதன் மூலமே
மனிதன் தனி வாழ்கையிலும் சிறப்பாக
உயர முடியும். உலகின் நன்மைக்காகப்
பாடுபடுவதுதான் தனி மனிதனின் உன்னத தர்மம்...”

அருட்செல்வர் டாக்டர் நா. மகாலிங்கம்





www.via.ac.in
Mail : info@via.ac.in | Phone : +91 74026 18001

# உழவர்
# சிந்தனைக் களஞ்சியம்

✳ மலர் 7 ✳ மார்ச் 2023 (மாசி – பங்குனி ) ✳ சிறப்பிதழ்

**வெளியீடு** : **வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனம்**
மணக்கடவு, பொள்ளாச்சி - 642 103

**நிறுவனர்** : அருட்செல்வர் டாக்டர் **நா. மகாலிங்கம்**

**தலைவர்** : முனைவர் **ம. மாணிக்கம்**
என்.ஐ.ஏ. கல்வி நிறுவனங்கள், பொள்ளாச்சி

**தாளாளர்** : திருமதி. **கி. கற்பகவள்ளி**
வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனம்

**ஊக்கம்** : **பேராசிரியர். சி. இராமசாமி,** பி எச்.டி.
செயலர், என்.ஐ.ஏ கல்வி நிறுவனங்கள், பொள்ளாச்சி

**பேராசிரியர். நா. கெம்பு செட்டி,** பி எச்.டி.
இயக்குனர், வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனம்

**பேராசிரியர். மு. சிவசாமி,** பி எச்.டி.
முதல்வர் (பொறுப்பு), வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனம்

**ஒருங்கிணைப்பாளர்**: முனைவர் **கா. காளிதாஸ்**
உதவிப் பேராசிரியர், வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனம்

**தொகுப்பு** : முனைவர் **கோ. தாமோதரன்**

முனைவர் **வ. பூபாலன்**

செல்வி. **செ. பிரியதர்ஷினி**

முனைவர் **பா. நந்தினி தேவி**
உதவிப் பேராசிரியர்கள்,
வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனம்

**வடிவமைப்பு** : திரு. **எஸ். சிற்பி பால சுப்ரமணியம்**
ஒருங்கிணைப்பாளர், வேளாண் அபிவிருத்தி மையம்,
வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனம்

**விநியோகித்தல்** : திரு. **ஆ. குமாரச் செல்வன்,** உதவி நூலகர்,
வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனம்

# பொருளடக்கம்



| வ. எண் | கட்டுரைகள் | ப.எண் |
|---|---|---|
| 1 | மக்காச்சோள விவசாயின் மனபயக்கும் வேதனை..!! | 5 |
| 2 | வெற்றிலையின் வெற்றிக் கதை | 7 |
| 3 | கல்வியில் தொடங்கி கலப்பை வரை !! | 9 |
| 4 | எருமை வளர்ப்பு ஒரு பார்வை | 12 |
| 5 | அடுக்கு தேனீ வளர்ப்பில் அண்ணாமலை | 14 |
| 6 | சிகரம் தொடும் சிப்பி காளாண் | 18 |
| 7 | கோமாதாவின் கோ-கிருபா | 20 |
| 8 | நலம் தரும் நாட்டு சர்க்கரை | 22 |
| 9 | பயிர் மகசூல் நிர்ணயப் போட்டி விளைவித்தவனை உயர்விப்போம்! | 25 |
| 10 | பழமையை நோக்கிய பயனம் | 27 |
| 11 | செங்காந்தள் ஓர்பார்வை | 29 |
| 12 | வதிலை இயற்கை விவசாயியும் ஒரு நேர்காணல் | 32 |
| 13 | உதிரும் இலைகளால் விளைந்த ஓர் மாற்றம் | 35 |



“சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை.

திருவள்ளுவர் (குறள் 1031)

உழவுத் தொழிலில் இருக்கும் நெருக்கடிகளை எண்ணி, வேறு வேறு தொழிலுக்குச் சென்றாலும் உலகம் ஏரின் பின்தான் இயங்குகிறது. அதனால் எத்தனை வருத்தம் இருந்தாலும் உழவுத் தொழிலே முதன்மையானது.


உழவர் சிந்தனைக் களஞ்சியம் இதழில் வரும் கருத்துக்களுக்கு
அதன் கட்டுரை ஆசிரியர்களே பொறுப்பாவர்



தொடர்ப்புக்கு : +91 74026 18001, மின்அஞ்சல் : edp@via.ac.in.
வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனம், மணக்கடவு, பொள்ளாச்சி - 642 103.

அச்சிட்டோர்
**ருக்குமணி ஆப்செட் பிரஸ்**
E-2 சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், கோவை - 641 021.
போன் 0422 - 2672789,26724535 மெயில் : office.rukumaniop@gmail.com

# ஊரக தொழில்முனைவோர் விழிப்புணர்வு மேம்பாட்டுத் திட்டம்

**கற்க கசடறக் கற்பவை கற்றபின்**
**நிற்க அதற்குத் தக**

கற்க வேண்டியதை குற்றமறக்கற்று அதன்படி வாழ வேண்டும் என்பது வள்ளுவன் வாக்கு. அதற்கேற்றார் போல் உருவாக்கப்பட்டது தான் கிராம தங்கல் திட்டம் (அ) ஊரக தொழில் முனைவோர் விழிப்புணர்வு மேம்பாட்டு திட்டம். இத்திட்டமானது கிராமப்புற தொழில் முனைவோருக்கு, விவசாயத்தில் உள்ள நடைமுறை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. 2015 ஆம் ஆண்டு இந்திய வேளாண் ஆராய்ச்சி குழுமத்தின் மூலம் அனைத்து வேளாண் கல்லூரிகளிலும் இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. பட்டதாரிகள் சுயதொழில் மேற்கொள்வதற்கும், கிராமப்புற வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கும், உணவு பாதுகாப்பிற்கும், விவசாயத்தை மேம்படுத்துவதற்கு தேவையான திறன்களை அளிக்கும் வகையில் இத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

சொன்னால் நான் மறப்பேன். எனக்கு காட்டினால்- என் நினைவில் இருக்கலாம். என்னை ஈடுபடுத்தினால், நான் புரிந்து கொள்வேன் என்ற கன்பூசியஸ் கோட்பாட்டின்படி வாணவராயர் வேளாண்மை கல்லூரியில், நான்காம் ஆண்டு வேளாண்மை பட்டப் படிப்பு படிக்கும் மாணவர்களுக்கு, ஊரக தொழில் முனைவோர் விழிப்புணர்வு மேம்பாட்டு பாடத்திட்டம் பயிற்றுவிக்கப்படுகிறது. பல திறன்களை பெற்ற வேளாண் பட்டதாரிகளை உருவாக்குவதே இதன் முக்கிய நோக்கமாகும். இந்தத் திட்டம் மாணவர்களுக்கு ஒரு சிறந்த தளத்தை உருவாக்குவதாக அமைந்தது. இதனை மூலம் கற்றல் (Learning by doing ) மற்றும் பார்ப்பதன் மூலம் நம்பிக்கை (Seeing is believing ) என்ற தத்துவங்களின் அடிப்படையில் இப்பாடத்திட்டத்தை தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் வழிகாட்டுதலின்படி அமைக்கப்பட்டது.

ஊரக வேளாண் பணி அனுபவம் மாணவர்களுக்கு, கிராமப்புற சூழ்நிலைகளை புரிந்து கொள்வதற்கும், விவசாயிகள் பின்பற்றும் விவசாய தொழில் நுட்பங்கள் பற்றி அறியவும், ஊரக வளர்ச்சிக்காக, மாணவர்கள் வேளாண் குடும்பங்களுடன் இணைந்து பணியாற்றும் திறன் மற்றும் மனப்பான்மைகளை வளர்க்க உதவுகிறது. மேலும் வேளாண் மாணவர்களுக்கு விவசாயம் சார்ந்த பிரச்சினைகளை கண்டறியவும், வேளாண் விரிவாக்க கருவிகளை பயன்படுத்தி நவீன விவசாய தொழில்நுட்பங்களை விவசாய பெருமக்களிடம் கொண்டு சேர்க்கவும், வழிவகை செய்கிறது. மாணவர்கள் விவசாயம் மற்றும் கிராமப்புற வளர்ச்சி

தொடர்பான பல்வேறு திட்டங்களை பற்றி அறியவும் மற்றும் அவற்றை செயல்படுத்துவதில் உள்ள வாய்ப்பையும் உருவாக்குகிறது. விவசாயிகளின் பல்வேறு பிரச்சனைகளை பற்றி மாணவர்கள் அறிந்து கொள்வதுடன் விவசாயம் சார்ந்த அறிவியல் தொடர்பான பிரச்சனைகளை தீர்ப்பதில் திறமையையும் நம்பிக்கையையும் பெற உதவுகிறது. இது விஞ்ஞானிகளின் மேற்பார்வையில் தத்தெடுக்கப்பட்ட கிராமங்களில் செயல்படுத்தப்படுகிறது.

**ஊரக வேளாண் பணி அனுபவத்தின் முக்கிய நோக்கங்கள்**

- மாணவர்களுக்கு கிராமப்புற சூழ்நிலையில் வேளாண்மை மற்றும் வேளாண் சார்ந்த தொழில்களை அறிய செய்தல்.
- மாணவர்களுக்கு விவசாயிகளின் சமுதாய மற்றும் பொருளாதார நிலைமைகளையும் விவசாயம் சார்ந்த பிரச்சினைகளையும் நன்கு அறிய செய்தல்.
- மாணவர்களுக்கு செயல்முறை பயிற்சியின் மூலமாக நடைமுறையில் நிலவும் பிரச்சனைகளை அறிய செய்தல் மற்றும் அதற்கான தீர்வு காண செய்தல்
- மாணவர்களின் தகவல் தொழில்நுட்பத் திறன்களை வளர்க்கவும் வேளாண் கருவிகளை பயன்படுத்தி தொழில்நுட்பத்தை விவசாயிகளிடம் கொண்டு செல்லும் திறன்களை வளர்க்கவும் உதவுதல்.
- சிக்கலான பிரச்சனைகளை சரி செய்யும் அளவிற்கு மாணவர்களின் திறமையும் நம்பிக்கையும் வளர்த்தல்.
- நடைமுறையில் உள்ள விரிவாக்கம் மற்றும் கிராமப்புற மேம்பாட்டு திட்டங்களை பற்றி விவசாயிகளுக்கு அறிமுகப்படுத்துதல்.

மொத்தம் 75 நாட்கள் கொண்ட பாடத்திட்டத்தில் 60 நாட்கள் கிராம தங்கல் திட்டமும், ஐந்து நாட்கள் வேளாண் உதவி இயக்குனருடன் இணைந்து பல்வேறு திட்டங்களையும், வேளாண் துறையின் செயல்பாடுகள் முதலியவற்றையும் அறிந்து கொள்கின்றனர். மீதமுள்ள ஐந்து நாட்கள் அரசு சாரா தொண்டு நிறுவனத்துடன் இணைந்து அவற்றின் செயல்பாடுகளையும் , கடைசி ஐந்து நாட்கள் வேளாண் சார்ந்த தொழிற்சாலைகளுக்கு சென்று மேலாண்மை திறன்களை வளர்த்து கொள்ள உதவுகிறது. வாணவராயர் வேளாண்மை கல்வி நிறுவனத்தின் இறுதியாண்டு மாணவர்கள் 12 குழுக்களாகப் பிரிந்து ரெட்டியார்சத்திரம், பனமரத்துப்பட்டி, தாராபுரம், திருச்செங்கோடு, பரமத்தி, மடத்துக்குளம், எடப்பாடி, காடையாம்பட்டி, ஆத்தூர், ஒரத்தநாடு, திருப்பானந்தாள், வத்தலகுண்டு, முதலான வட்டங்களில், இத்திட்டத்தின் மூலம் பயிற்சி பெற்று வருகின்றனர்.

**முனைவர் கா ஆனந்த்,**
உதவி பேராசிரியர்
(வேளாண்விரிவாக்கம்)
வாணவராயர் வேளாண்மைக் கல்வி
நிறுவனம், மணக்கடவு, பொள்ளாச்சி.

# மக்காச்சோள விவசாயின் மனபயக்கும் வேதனை !!



ஆத்தூர் வட்டாரத்தில் அரவணைக்கும் மக்களோடு எங்களது வேளாண் அனுபவ கற்றல் பயணம் (RAWE) இனிதே தொடங்கியது. பயணம் தொடங்கிய சில நாட்களில் எங்கள் மனதில் சலனம் ஏற்படுத்தும் ஒரு காட்சியானது ஆத்தூர் வட்டாரம் மஞ்சினி அருகே சிறு விவசாயி மாணிக்கவாசகம் என்பவரின் பண்ணை அனுபவத்தில் அறிந்தோம். மாணிக்கவாசகம் மக்காச்சோளம் பயிரை மூன்று ஏக்கரில் சாகுபடி செய்துள்ளார். வியர்வை சிந்தி தன் பிள்ளை போல பார்த்து வளர்த்த பயிர்க்கு தகுந்த விலை கிடைக்காததால் மனம் உடைந்து வருந்தினார். முத்துச்சோளத்திற்கு ஏற்ற ஈரப்பதம் அளவு இருப்பின் அதற்கேற்பவாறு விலை நிர்ணயம் செய்யப்படுகிறது.

இந்த விலை நிர்ணயமானது தனியார் கொள்முதல் வியாபாரிகள் ஒரு இயந்திரத்தின் (Moisture meter) உதவியோடு சரிபார்க்கின்றனர். அம்முறைபடி ஈரப்பதத்தின் அளவு 14 % இருப்பின் முதல் ரகம் என தரம் பிரிக்கின்றனர். அதன்படி முத்துச்சோளம் ஈரப்பதம் 18 to 20% என்றார் போல் அந்த கருவியில் காண்பித்தபடியால். அவர் முத்துச்சோளத்தை சூரிய ஒளியில் உலர வைத்து கொண்டிருந்தார்.

எனவே பருவநிலை மாற்றத்தின் காரணமாக எதிர்பாரா மழையினால் முத்துச்சோளம் நனைந்துத்தால் சரியான ஈரப்பதத்தினை விவசாயினால் எட்ட முடியவில்லை. எனவே விவசாயிகள் எதிர்பார மழைக்காக படுதா வைத்து மூடாக்கு போடுகின்றனர்.





இருந்த போதிலும் குறு விவசாயின் பொருளாதார நிலையினால் சரியான படுதா கூட இல்லாத அவலநிலை. இங்கும் அங்கும் ஓட்டை உடைசலாக காணப்பட்டது. அதனால் மழைநீர் அதன் உள்ளே சென்று முத்துச் சோளம் நனையும் நிலை ஏற்பட்டு விடுகிறது. இதனால் உலர வைக்கும் நாட்களும் கூடுகின்றது. இதற்காக சில தொழிலாளர்கள் ஈடுபடுத்தப்படுன்றனர். இதனால் அவருக்கு பயிர் சாகுபடி செலவு கூடுகின்றது.

**அரசுக்கு எங்களது வேண்டுகோள் :**

நாங்கள் வாணவராயர் வேளாண்மை கல்லூரியில் இளங்கலை வேளாண்மை பயிலும் இறுதியாண்டு மாணவர்கள் நாங்கள் தற்போது ஆத்தூர் வட்டத்தில் கிராம தங்கள் திட்டத்தில் (RAWE) ஈடுபட்டு பல்வேறு விவசாயிகளை சந்தித்து அவர்களின் வேளாண்பணி அனுபவங்களை பயின்று வருகின்றோம். அதன்படி, எங்கள் மாணவர்கள் கூட்டமைப்பு மூலமாக தமிழக அரசுக்கு ஒரு வேண்டுகோள்.

விவசாயிகள் தங்கள் விளைவித்த மக்காசோளத்தை நல்ல முறையில் உலர்ந்த, உலர்களம் (DRYING YARD) ஏற்படுத்தி தர வேண்டும். மேலும் அவர்களின் முத்துச் சோளத்தை தமிழக அரசு சார்பில் நேரடி கொள்முதல் செய்தல் வேண்டும் என கேட்குக்கொள்கிறோம்.

இப்படிக்கு
கிராம தங்கல் திட்ட மாணவர்கள்
ஆத்தூர் வட்டம், சேலம் மாவட்டம்
கோகுல், கோகுல் ராஜு,
கோபிநாத், கௌதம், ஹரிஹரன்,
ஜீவபாரதி, ஜஸ்வந்த் ராம்,
ஜோ பெலிக்ஸ்,
கமல் பிரகாஷ், கார்த்திகேயன்.






**மேற்கே வாங்கலம்மனும்**

**கிழக்கே ஆஞ்சநேயரும் அருள்பாளிக்க**

**அன்னை காவிரியின் அணைப்பில் அன்பு மக்களின் வாஞ்சையோடு**

**நாமக்கல் மாவட்டத்தின்**

**வேலூர் தாலுகாவில் அமைந்துள்ள**

**வட்டாரமே பரமத்தி !**

பரமத்தியைச் சுற்றியுள்ள கிராமங்களில் மரவள்ளிகிழங்கு, கரும்பு, கோரை, எள்ளு, சோளம் என பல்வேறு பயிர்கள் அதிகளவில் பயிரிடப்பட்டாலும், தனக்கென்ன உள்ள பாரம்பரியத்தால் இன்றும் "**வெற்றிலை**" தனித்துவம் உடையதாக திகழ்கிறது.

**வெற்றிலை நகரம்:**

வெற்றிலை மனித வாழ்வியலோடு ஒன்றிணைந்தது. பரமத்தியை சுற்றியுள்ள கிராமங்களான பொத்தனூர், பாண்டமங்கலம், மோகனூர், தொட்டியம், வேலாயுதம்பாளையம், பாலசமுத்திரம், பாலப்பட்டி, புதுப்பாளையம் மற்றும் வேலூரின் பெரும்பாலான பகுதிகளில் வெற்றிலை சாகுபடி செய்யப்படுகிறது. இங்கு உற்பத்தியாகும் வெற்றிலை தரமானதாக இருப்பதால் தமிழகமெங்கும் அனுப்பபடுகிறது. இது தவிர, வடமாநிலங்களுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகிறது. அதனால்தான் **"வெற்றிலை நகரம் வேலூர்"** என்று அன்போடு அழைக்கப்படுகிறது.

**பயிர் சாகுபடி முறை:**

இங்கு இரண்டு வகையான வெற்றிலை பயிரிடப்படுகிறது. அவை வெள்ளை கொடி வெற்றிலை மற்றும் கற்பூர வெற்றிலை ஆகும். இப்பயிர் மேட்டுப்பாத்தி முறையில் சாகுபடி செய்யப்படுகிறது. பாத்திகளின் மேல் முதலில் அகத்தி செடிகள் வளர்க்கப்படுகிறது. அகத்தி நடப்பட்ட 50 நாட்களில் வெற்றிலை பதியம் போடப்படுகிறது. பின்னர், 40 நாட்களுக்கு கொடியினை தரையில் படரவிட்டு பின், படர்ந்த கொடிகளின் நுனிகள் அகத்தியோடு இணைத்து வாழைநார் கொண்டு கட்டப்படுகிறது. 80-100 நாட்களுக்குள் வெற்றிலை கொடி நன்றாக அகத்தியின்மீது படர்ந்துவிடும். அதன் பின், 20 நாட்களுக்கு ஒருமுறை அறுவடை செய்யப்படுகிறது.

**நீர் பாய்ச்சும் முறை:**

பாத்திகளுக்கு இடையே பள்ளம் வெட்டப்பட்டு நீர் பாய்ச்சப்படுகிறது. பின்னர், மூங்கில் பட்டையைப் பயன்படுத்தி

கொடிகால்களில் நீர் இறைக்கப்பகிறது. இங்கு பெரும்பாலும் காவிரி ஆற்றுப்பாசனத்தைச் சார்ந்தே சாகுபடி செய்யப்படுகிறது.

வெற்றிலை என்பது பாரம்பரிய நேரடியாக பயன்படும் இலை என்பதால் எவ்வித களைக்கொல்லி மற்றும் பூச்சிக்கொல்லி பயன்படுத்தப் படுவதில்லை. 105 வெற்றிலைகள் சேர்ந்த கட்டு ஒரு கவுளி எனப்படும். 104 கவுளிகள் சேர்ந்தது ஒரு கோட்டை எனப்படும்.

சராசரியாக ஒரு கோட்டை ரூ 5000 முதல் 8000 வரை விற்பனையாகிறது. தரம் உயர்ந்த வெற்றிலை கொண்ட கோட்டையாக இருப்பின் ரூ 11,000 வரை விற்பனையாகிறது. வெற்றிலை இன்றளவும் மண்டிகளில் ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுகிறது.

**தமிழர்கள் வாழ்வில் வெற்றிலை:**

- இரண்டு வெற்றிலை, சிறிதளவு பாக்கு, சிறிதளவு சுண்ணாம்பு ஆகியவை சேர்ந்து தாம்பூலம் எனப்படுகிறது.
- தாம்பூலம் தமிழர் வாழ்வில் இன்றியமையாத ஒன்று. திருமணம், சடங்கு, விருந்து மற்றும் பல நிகழ்ச்சிகள் தாம்பூலம் வழங்கப்படுகிறது.
- துவர்ப்பு, உப்பு, கசப்பு ஆகிய சுவைகள் ஒருங்கே இருப்பதனால், தாம்பூலம் வாத நோய்க்கு மிகச்சிறந்த மருந்தாகும்.
- வெற்றிலையின் நுனியில் லட்சுமியும், நடுவில் சரஸ்வதியும், காம்பில் பார்வதியும் இருப்பதாகக் ஐதிகம் அதனால்தான் கடவுளுக்குப் படைக்கும் எல்லாவிதமான நிவேதனங்களிலும் வெற்றிலை முதன்மை இடம் வகிக்கிறது.
- **“பத்து வெற்றிலையை ஒருங்கே மென்றால் பாம்பு விஷமும் முறிந்து விடும்”** என்பது தமிழர் வாய்மொழி.
- வெற்றிலை ஒரு மிகச்சிறந்த வலி நிவாரணி. வெட்டுக்காயம், சிராய்ப்புகள், மற்றும் தடிப்புகள் காரணமாக வரும் வலியைப் போக்கும் ஆற்றலுடையது.
- மத்திய நரம்பு மண்டலத்தின் செயல்பாட்டைத் தூண்டி மனச் சோர்வை எதிர்க்க வல்லது.

**வெற்றிலை சாகுபடியில் உள்ள சிக்கல்கள்:**

- 1980 களில் 500 க்கும் மேற்பட்ட வெற்றிலை விவசாயிகள் இருந்த வேலூரில் தற்போது 280 விவசாயிகள் மட்டுமே உள்ளனர்.
- சரியான குளிர்சாதன சேமிப்பு வசதி இல்லாத காரணத்தால், வெற்றிலை அதிகளவில் வீணாகிறது. அதனால் இலாபம் பெரிதளவில் குறைகிறது.
- மேலும், பல்வேறு மருத்துவ குணங்கள் உடைய வெற்றிலைக்கு அரசு நலத்திட்டங்கள் பெரிதளவில் கிடைப்பதில்லை. ஆதலால் சிறு, குறு நில விவசாயிகள் பாதிக்கப்படுகின்றனர்.
- பயிர் காப்பீடு திட்டம் இல்லாமையால், பயிர் இழப்பு காலங்களில் ஏற்படும் நஷ்டங்களை தவிர்க்க முடிவதில்லை.

**“மருத்துவம் மணக்கும் மகத்துவஇலை!**
**விஷமுறி கொண்ட வீரியஇலை!**
**வேளாண் குடியின் வெற்றி இலை!**
**இந்த இதய வடிவ வெற்றிலை!”**

கிராம தங்கல் திட்ட மாணவியர்,
பரமத்தி வட்டாரம், நாமக்கல் மாவட்டம்
பிரேமிக்கா, பிரியதர்ஷினி
ராஜலக்ஷ்மி, ராஜராஜேஸ்வரி,
ரூபிணி, சமீராசபிரின்,
சந்தியா, சங்கீதா,
சந்தோஷ்ப்பிரியா, சரண்யா.

# கல்வியில் தொடங்கி கலப்பை வரை !!

## ஒரு தனிமனிதனின் கடமை

**ஆற்றங் கரையின் மரமும் அரசறிய**
**வீற்றிருந்த வாழ்வும் விழுமன்றே ஏற்றம்**
**உழுதுண்டு வாழ்வதற்கு ஒப்பில்லை கண்டீர்**
**பழுதுண்டு வேறோர் பணிக்கு நல்வழி 12**

என்ற வரிகளுக்கிணங்க உழவுத் தொழிலானது தலையாய தொழிலாகவே கருத்தப்படுகிறது. ஆனால் தலையாய தொழிலாக கருத படுகிறதே தவிர நம் செயல்கள் யாவும் அதை விளக்கும் வண்ணம் இல்லை என்பதே நிதர்சனம். இயற்கை சீற்றங்களும் பருவநிலை மாற்றங்களும் அதிகரித்துவிட்டது. இதற்கு காரணம் என்ன என்று என்றேனும் சிந்தித்ததுண்டா? நாம் வாழ்வதற்கு இப்பிரபஞ்சத்தில் நம் பூமித்தாய் மட்டுமே தகுந்தவளாய் விளங்குகிறாள். நீர், நிலம், நெருப்பு, ஆகாயம், காற்று ஆகிய பஞ்ச பூதங்கள் இல்லாத உலகை கற்பனை செய்து பாருங்கள். இவையே நம் வாழ்விற்கு வாழ்வாதாரங்களாக விளங்குகிறது என்பதில் எள்ளளவும் அய்யம் இல்லை. இவற்றை உருவாக்கியது யார்? உயிர்களை இவ்வுலகில் உலாவவிட்டது யார்? இயந்திரங்கள் நிறைந்து கொண்டிருக்கும் இவ்வாழ்க்கை முறையில் ஈன்ற தாயிற்கு இணையான நம்மை, நமக்கானவற்றை படைத்த இயற்கையை தான் மறந்தோமா? மரங்களை வெட்டினோம், நீர், நிலம், காற்று என அனைத்தையும் மாசுப்படுத்தி தாயவளின் புனிதத்திற்கு பங்கம் விளைவித்தோம். இவை தான் பூமியை வாழ தகுதியான இடமாக



மாற்றுவதா? பொறுமையின் வடிவமான இயற்கையும் பொறுமை இழந்ததன் அறிகுறி தான் சீற்றங்களும் பருவநிலை மாற்றங்களுமோ?

**“பூமி நமது தாய், அந்த தாய்க்கு**
**என்னவெல்லாம் நேரிடுகிறதோ...**
**அதுவே அவளுடைய பிள்ளைகளாகிய**
**நமக்கும் நாளை நேரிடும், ஏனென்றால்**
**பூமி மனிதனுக்குச் சொந்தமானது அல்ல**
**மனிதன்தான் பூமிக்குச் சொந்தமானவன்”**

என்ற நம்மாழ்வாரின் வரிகளை நினைவில் நிறுத்தி, இரசாயனத்தை பயன்படுத்தி நம் தலைமுறைக்கு நாமே நச்சுக்களை சேர்த்து கொண்டிருக்கும் அவல நிலையை மாற்றி இயற்கையோடு ஒன்றிய உழவுத் தொழிலை, அதாவது இயற்கைக்கு பாதாகமான செயல்முறைகளை விடுத்து இயற்கை விவசாயத்தை அனைவரும் நம் தலைமுறையின் நலன் கருதி கையில் எடுக்க வேண்டும்.

இதன் முக்கியத்துவத்தை முற்றிலும் உணர்ந்து, அதையே இளைய தலைமுறைக்கு முன்னோடியாய் விளங்கும் வண்ணம் செய்து கொண்டிருப்பவர் **“பால்காரர் செல்வம்”** என்று கடத்தூர் மக்களால் அறியப்படுபவர் **திரு. கலைச்செல்வன்** அவர்கள். இவர் இயற்கையின் மீது மட்டுமின்றி சமூகத்தின் மீதும் மிகுந்த அக்கறை கொண்ட ஒரு சமூக ஆர்வலரும் ஆவார். 1990 இல் எம்.ஏ பொருளாதாரம் பட்டப்படிப்பை முடித்து தமது நிலத்தில் விவசாயம் பார்க்க ஆர்வம் காட்டினார். அப்போது அவர் தமது ஊரில் பெண்களுக்கு சிறு வயதிலேயே திருமணம் நடப்பதால், அப்பெண்கள் இளம் வயதிலேயே கருத்தரித்து குழந்தைகள் இறந்து பிறந்த அவல நிலையை கண்களால் காணமுடியாமல் இதற்கு ஒரு முடிவு காண வேண்டும் என்ற உன்னத நோக்கத்தோடு பல முயற்சிகள் மேற்கொண்டு தமது ஊரில் மேல்நிலைப்பள்ளி வரை கொண்டு வந்தார்.

**முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை**
**இன்மை புகுத்தி விடும்** -குறள் 616

என்பதற்கிணங்க 19 ஆண்டுகாலங்கள் முனைப்புடன் முயற்சியை கைவிடாது பாடுபட்டார். நல்ல நோக்கத்தோடு நல்லவை நடந்தேற அடி ஒன்று எடுத்தால் அதற்கு உறுதுணையாய் பல கரங்கள் இணையும் என்பதற்கிணங்க, பலர் உதவிட, பல இன்னல்களுக்கு பிறகு 2016-17இல் மேல்நிலைப்பள்ளியாக அங்கீகரிக்கப்பட்டது . 1996 இல் ஆரம்பப் பள்ளியாய் இருந்தது நடுநிலைப் பள்ளியானது, 11ஆண்டுகளுக்கு பிறகு உயர்நிலைப்பள்ளி ஆனது. 2009இல் பள்ளியை தரம் உயர்த்தி தர தாமதித்ததால் நடந்த போராட்டத்தின் போது இவர் திருச்சி சிறைச்சாலையில் அடைக்கப்பட்டர். அங்கும் விவசாயத்தின் மீது அவர் கொண்ட அன்பின் பேரால் காய்கறிகள் விளைவித்து தென்னை மரங்களையும் பராமரித்தார். அவரது முயற்சியின் பலனாக இப்பள்ளி நான்கு முறை சிறந்த பள்ளிக்கான அரசு விருதையும், வட்டார அளவில் தொடர்ந்து மாணவர்கள் 100% தேர்ச்சியையும் பெற்றுள்ளார்கள்.

**இயற்கை வேளாண் பயணம்:**

2009ஆம் ஆண்டில் தமது இயற்கை வேளாண்மை பயணத்தை தொடங்கியவர். தமது பயணத்தின் ஆரம்ப காலத்தில் குறைந்த விளைச்சலையே பெற்றாலும், 2013 இல் இருந்து நல்ல விளைச்சலை எடுக்க துவங்கினார்.இவரது துணைவி திருமதி கவிதா அயராமல் பராமரிப்பு வேலைகளில் ஈடுபட்டு துவக்கம் முதல் இன்று வரை உறுதுணையாய் விளங்குகிறார். இவர் 2016-17இல் டெல்லியில் சிறந்த உழவர் உற்பத்தியாளர் நிறுவனமாக பாராட்டப்பட்ட சேரன் உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்தின் ஒரு அங்கமாக இருந்தார். அப்போது அதில் தலைமை பொறுப்பு வகித்தவர் திரு. ராதாகிருஷ்ணன், தலைமை இன்ஜினியராய் ஓய்வு பெற்றவர். இப்போது 15 பேர் கொண்ட தென்றல் இயற்கை விவசாய குழுவில் உறுப்பினராக உள்ளார். இக்குழு 2022இல் இயங்கத் துவங்கியது.

இவர் மடத்துக்குளம் வட்டாரம் கடத்தூரில் அமைந்துள்ள தமது நிலத்தில் நாட்டு இரகத் தென்னைகளை வைத்துள்ளார். நெல் ரகங்களில் தூயமல்லி மற்றும் கிச்சிலி சம்பா போன்ற பாரம்பரிய நெல் வகைகளை பயிர் செய்துள்ளார். அதோடு இரண்டு எருமை மாடுகளையும் வைத்துள்ளார். இவரது நிலத்தில் மண்வளம் நிறைந்திருப்பதன் அறிகுறியாக மண்ணை அள்ளினால் மண்புழுக்கள் உடனடியாகத் தெரிகின்றன. மேலும் தனது நிலத்தை ஏழு ஆண்டுக்கு ஒரு முறை மட்டுமே உழுகிறார்.

**இயற்கை வேளாண்மை செய்முறைகள்**
**வேரூக்கி ஜீவாமிர்தம்**

500லிட்டர் தொட்டியில்

- 200 கிலோ சாணம்
- 500 லிட்டர் கோமயம்
- 1.5 கிலோபாசிப் பயிறுமாவு
- 2 கிலோ ஹைட்ரோஸ் இல்லாத நாட்டுசர்க்கரை
- 1 கிலோ எந்த நிலத்திற்கு தயார் செய்கிறோமோ அந்நிலத்தின் மண்

இவை அனைத்தையும் சேர்த்து காலை மற்றும் மாலை 15 முறை வலப்புறமாக கலந்து விட வேண்டும். நான்கு நாட்களுக்கு பிறகு அதை வேரூக்கியாக பயன்படுத்துகிறார்.

**இலையூக்கி பஞ்சகாவ்யம்**

தேவையானவை :

5கிலோ சாணம், 1 கிலோ நெய், 5 லிட்டர் பால், 5 லிட்டர் தயிர், 5 லிட்டர் கோமியம், 3 லிட்டர் இளநீர், 6 கிலோ நாட்டுசர்க்கரை 4 பப்பாளி, 20 வாழைப் பழம்.

**செய்முறை** : 5 கிலோ சாணத்தை நெய்யோடு பிணைந்து மூன்று நாள் வைத்து, பின்னர் 5லிட்டர் தயிர் சேர்த்து மூன்று நாள் வைக்கவும். பின்னர் 5 லிட்டர் பால் கலந்து மூன்று நாள் வைத்து, பின் கோமியம் கலந்து மூன்று நாள் வைத்து, பின்பு இளநீர் கலந்து மூன்று நாள் வைக்கவும். 15 ஆவது நாள் நாட்டு சர்க்கரை கலந்து இரண்டு நாட்கள் வைத்து, பின் வாழைப்பழம் சேர்த்து இரண்டு நாட்கள் வைத்து, பின் பப்பாளி சேர்த்து, இரண்டு நாள் வைத்து இறுதியாக பதநீர் (கள்) சேர்க்கவும். 27ஆவது நாளில் தயார் ஆகிவிடும். 30 ஆவது நாளில் இருந்து அவர் இதை இலையூக்கியாக பயன்படுத்துகிறார். அதுமட்டுமின்றி இது பூச்சிவிரட்டியாகவும்செயல்படுகிறது.

**மீனமிலம்:**

50 லிட்டர் கேனில், மீன் கழிவு 23 கிலோ, நாட்டுசர்க்கரை 24 கிலோ, 10 - 20 வாழைப்பழம் (கற்பூரவள்ளி), பேரிச்சை கால் கிலோ, ஆகியவற்றை சேர்த்து 30-40 நாள் வைத்து உபயோகித்தால் தென்னையில் குரும்பை உதிர்தல் குறையும், காய்ப்புத்திறன் கூடும், வறட்சியைத் தாங்கி வளரும். தயாரிக்கப்பட்ட மீனஅமிலம் 6 மாதம் வரை கெடாமல் இருக்கும்.

**தழையூக்கி பூச்சிவிரட்டி**

ஆடு மாடுகள் தீண்டா பத்து இலைகள் (அடத்தோடா, வேம்பு, எருக்கம், ஊமத்தை, புங்கம், தும்பை, கற்றாழை, துளசி, பப்பாளி, அரளி) ஒவ்வொன்றையும் ஒரு கிலோ விகிதம் இடித்து அதனுடன் 13லிட்டர் கோமியம் கலந்து 15 நாட்கள் வைத்தால் பூச்சி விரட்டி தயார். பஞ்சகாவ்யம் உபயோகிக்காத காலங்களில் பூச்சி தாக்குதல் இருந்தால் பூச்சி விரட்டியை உபயோகிக்கலாம்.

**நெல், விதை முதல் விளைச்சல் வரை ஓர் ஒப்பீடு**

கலைச்செல்வன் அவர்கள் பாரம்பரிய நெல் இரகங்களை இயற்கை வேளாண்மை முறையில் பயிர் செய்து ஈட்டும் இலாபத்தை ஓர் ஒப்பீடாகக் காணலாம்.

| விவரங்கள் | வேளாண்மை (ரசாயனவழி) ரூபாய் | வேளாண்மை (இயற்கை வழி) ரூபாய் |
|---|---|---|
| உழவு கூலி | 9500 | 9500 |
| விதை/ நாற்று | 2000 | 320 |
| வரப்பு வெட்டு மற்றும் நடவு கூலி | 8000 | 3000 (வரப்பு வெட்டு மட்டுமே) |
| களையெடுத்தல் | 3000 | 3000 |
| மருந்து அடித்தல் (2 முறை) | 6000 | |
| உரம் (3முறை) | 13000 | 2000 (மீனமிலம் போன்ற இடு பொருட்கள்) |
| அறுவடை | 5000 | 5000 |
| மொத்த செலவு | 36500 | 22820 |
| மகசூல் (ஒரு ஏக்கர்) | 46 மூட்டை | 38 மூட்டை |
| ஒரு ஏக்கருக்கான மொத்த வருமானம் | 53400( 1600/ மூட்டை + 5000 வைக்கோல்) | 156000 (2280 / மூட்டை+ 12000 வைக்கோல்) |
| ஒரு ஏக்கருக்கான நிகர வருமானம் | 16900 | 145180 |

இவர் 50 செண்ட் நிலத்தில் 1200 கிலோ கிராம் நெல் மகசூலைப் பெறுகிறார். ஒரு கிலோ நெல்லை 70முதல் 100ரூபாய் வரை விற்கிறார்.

**இயற்கை முறையில் தென்னை**

400 தென்னை மரங்களிலிருந்து வெட்டு ஒன்றுக்கு 7000 முதல் 12000 காய்கள் வரை கிடைக்கிறது.

ஒரு வருடத்தில் ஒரு மரத்திலிருந்து 280 காய்கள் வரை எடுத்து சாதனை படைத்துள்ளார்.

- **இயற்கைக்குத் திரும்புவோம்.**
- **மண்புழு என்பது மண்ணின் தோழன், செயற்கை உரத்தால் அதை சாகடிக்காதிருப்போம்.**
- **சாகுபடி விதிகள் நம் முன்னோரின் மொழிகள்.**
- **அதை நவீனத்தின் கதைகளால் மறக்காதிருப்போம்.**
- **உழவன் என்பவன் உலகத்தின் மையம் வறுமையால் அவனைக் கொல்லா திருப்போம்.**
- **இயற்கைக்குத் திரும்புவோம், வாழ்க்கை வளம் பெறும்.**
- **உழவினை விரும்புவோம், மனுக்குலம் நலம் பெறும்**

உழவை விட்டுவிட்டு எதையும் வாழ்வில் சிந்திப்பது அறிவீனம். எனவே தான் வள்ளுவர் சொன்னார்

**சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை!**

இப்படிக்கு
கிராம தங்கல் திட்ட மாணவ - மாணவிகள்
மடத்துகுளம் வட்டம், திருப்பூர் மாவட்டம்.
சத்யப்ரியா, செல்வநிவேதினி,
சோபியா பானு, ஷ்ரீஸ்நேஹா,
ஸ்ரீராக்கி மேனன், சினேகா, ஸ்ரீகவி,
ஸ்ரீநிதி, சுபாஷினி.

# எருமை வளர்ப்பு ஓர் பார்வை



ஒரத்தநாடு ஊராட்சி அருகிலுள்ள செம்மண் கோட்டை கிராமத்தில் வெற்றிகரமாக எருமைகள் வளர்ப்பில் சாதித்து வரும் விவசாயி மதிப்பிற்குரிய சுப்பிரமணியம் அவர்கள். 1985ம் ஆண்டு ஒரு எருமை மாட்டுடன் தொடங்கிய இவர் பண்ணை தற்போது 25க்கும் மேற்பட்ட எருமை மாடுகளுடன்30வருடங்களுக்கும் மேலாக இவரின் அயராது உழைப்பு மற்றும் பராமரிப்பினால் வெற்றிகரமாக செயல்பட்டு வருகிறது.

**கொட்டகை :**

பிரதான சாலையின் ஓரத்தில் 20 அடி அகலம் மற்றும் 42 அடி நீளம் கொண்ட கொட்டகை அமைத்துள்ளார். தரைப்பகுதியினை மண் தரையாகவே பராமரிக்கும் இவர் கூறியதாவது, ‘கருங்கல் அல்லது சிமெண்ட்தளமாக இருந்தால் எருமை மாடு வழுக்கி விழும் வாய்ப்புள்ளது மற்றும் அதிக நேரம் படுத்திருக்க இயலாது. மேலும் மண் தரையில் உண்டாகும் சேறு, சகதி பெரும் பாதிப்பை ஏற்படுத்துவதில்லை’’ என்றார்.

**தீவனம் மற்றும் மேய்ச்சல் :**

பெரிய எருமை மாடுகளுக்கு தினமும் தவிடுடன் அரைக் கிலோ அளவிலான கடலைப் புண்ணாக்கு மற்றும் கன்று குட்டிகளுக்கு பாதி அளவிலான தீவனமும் வழங்குகிறார். மேலும் கறவையில் உள்ள எருமை மாடுகளுக்கு தினமும் பருத்திக்கொட்டை புண்ணாக்கு சேர்த்து வழங்குவதாக கூறினார். காலை முதல் மாலை வரை அனைத்து எருமை மாடுகளையும் பசுந்தீவன மேய்ச்சலுக்கு அழைத்து செல்கிறார்.

**எருமை மாட்டுப் பால் மற்றும் சாணம் :**

தற்போது ஏழு எருமை மாடுகளில் பால் கறப்பதாகவும், ஒரு எருமை மாடு தினமும் ஏழு லிட்டர் பால் தருவதாகவும் கூறினார். மேலும் சொந்தமாக டீ கடை ஒன்று நடத்தி வருகிறார்.தான் வளர்க்கும் எருமைகள் மூலம் கிடைக்கும் பால் மட்டுமே பயன்படுத்துகிறார். மீதமிருக்கும் பாலை ரூ. 60 க்கு விற்பனை செய்கிறார். தனக்கு சொந்தமான ஒன்றரை ஏக்கர் விளை நிலத்தில் உரமாக எரு பயன்படுத்துகிறார். வரப்பில் உள்ள 20 தென்னை மரங்களுக்கும் 2 மாதங்களுக்கு ஒரு முறை எரு உரமிடுகிறார். மேலும் ஒரு டன் 3000 ரூபாய் வீதம் விற்பனை செய்வதாக கூறினார்.

**நோய் கட்டுப்பாடு :**

மழைக்காலத்தில் கோமாரி நோயினால் எருமை மாடுகள் பாதிப்படையாமல் தடுக்க அரசு சார்பில் தடுப்பூசி செலுத்தப்படுவதாகவும்,

வருடத்திற்கு ஒரு முறை மட்டுமே சினை ஊசி போடப்படுவதாகவும் கூறினார். மேலும் கன்று குட்டிகளுக்கு ஒரு வருடம் தாய்ப்பால் வழங்கி ஆரோக்கியமான முறையில் வளர்த்து வருகிறார்.

**உயர்ந்த வாழ்வாதாரம் :**

எருமை மாடுகள் மூலம் கிடைத்த வருமானத்தில் விளைநிலம் வாங்கியதுடன், புதிய வீடும் கட்டியுள்ளார். மேலும் மகன்களின் படிப்பு செலவுகளையும் பார்த்துக் கொள்வதாக கூறினார். இறுதியாக "பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கிய நிலையில் இருந்த போது எருமை மாடுகளே எங்கள் வாழ்வாதாரம் உயர துணை நின்றது" என மகிழ்ச்சியோடும், புன்னகையோடும் கூறியதைக் கேட்டு நாங்கள் மனம் நெகிழ்ச்சியோடு விடைபெற்றோம்.

இப்படிக்கு<br>
கிராம தங்கள் திட்ட மாணவர்கள்<br>
ஒரத்தநாடு வட்டம், தஞ்சாவூர் மாவட்டம்.

கிருஷ்ணா குமார்,<br>
லட்சுமி நாராயணன்,<br>
லோகேஷ், மனோரஞ்சித்,<br>
நந்தன், நவீன், லஸ் ஜெப்பிரி,<br>
பிரதீஷ் டைட்டஸ்,<br>
ப்ரீத்தம் வசீகரன்,<br>
ராகுல்.





# அடுக்குத்தேனீ வளர்ப்பில் அண்ணாமலை

ஊரக வேளாண்மை அனுபவ கிராம தங்கல் திட்டத்தின்கீழ் எடப்பாடி வட்டாரத்தில் வாணவராயர் வேளாண் கல்லூரியில் பயிலும் நான்காம் ஆண்டு மாணவிகள் சுபிக்ஷா.மு, சுருமி சுபையர், சுஷ்மிதா.ம, சுவாதி.சி, தாமரை தர்ச்ணா.ச, வானதி.வ, வினிதா.வி, விஷ்ணுபிரியா.மா, மற்றும் யமுனாதேவி.மு ஆகிய நாங்கள் 26.01.2022 சேலம் மாவட்டம், எடப்பாடி வட்டம், செட்டிப்பட்டியில் அமைந்துள்ள அண்ணாமலை ஆர்கானிக் தேனீ வளர்ப்பு பண்ணையைப் பார்வையிட்டோம்.

பண்ணையின் உரிமையாளரான திரு.அண்ணாமலை அவர்கள் திருச்சியில் குமுலூரில் உள்ள IoA (Institute of Agriculture)-ல் பட்டைய படிப்பை (2016 - 2018) கல்வியாண்டில் முடித்தவர். பிறகு சேலம் ஆத்தூரில் உள்ள "ராசிவிதை" நிறுவனத்தில் ஒரு வருடம் பணியாற்றியுள்ளார். பிறகு 2019 ஆம் ஆண்டு முதல் தேனீ வளர்ப்பில் ஈடுபட்டு வருகிறார். ஆரம்பதில் அவர் சிறிய முதலீட்டில் 2 தேனீப் பெட்டிகளுடன் பயணத்தைத் தொடங்கினார். ஆனால் தேனீ வளர்ப்பில் போதிய பயிற்சி மற்றும் அனுபவமில்லாத காரணத்தால் அவர் மேற்கொண்ட முயற்சியில் வெற்றி பெற இயலவில்லை. பின்பு மத்திய அரசின் "அக்ரி கிளினிக் மற்றும் வேளாண் வணிக மையம்" (ACABC) போன்ற பல்வேறு இலவச பயிற்சி வகுப்புகளில் கலந்து கொண்டு, அதன் மூலம் புதிய அனுபவம் பெற்று பின் பல்வேறு இடங்களில் தேனீ வளர்ப்பைத் தொடங்கியுள்ளார்.

தேனீ வளர்ப்புக்கு பாக்கு, தேக்கு,தென்னை, வாழை, பருத்தி, எள் போன்ற அயல் மகரந்தச் சேர்க்கை நடைபெறும் தாவர இனங்களை அவர் தேர்வு செய்தார். இத்தாவரங்கள் அனைத்திலும் தேனீ வளர்ப்பிற்குத் உகந்தவையாக உள்ளன.

**தேனீக்களில் வகைகள் :**

- மலைத் தேனீ
- கொம்புத் தேனீ
- அடுக்குத் தேனீ
- கொசுத் தேனீ
- இத்தாலியன் தேனீக்கள் உள்ளன.

இவர், பெட்டிகளில் வைத்து வளர்க்கப்படும் அடுக்குத் தேனீயை வளர்த்து வருகிறார்.

**பெட்டியின் அமைப்பு :**

- தேனீ வளர்ப்பில் மிக முக்கியமாகக் கருதப்படுவது "தேனீ வளர்ப்புப் பெட்டி".
- இந்த பெட்டியானது 12" உயரம் உடையது.
- தேனீ வளர்ப்புப் பெட்டியில் 4 பாகங்கள் உள்ளன. அவை அடிப்பலகை, புழுவறை, சூப்பர் சேம்பர் மற்றும் மூடி.
- இவர் தேனீ வளர்ப்புக்கு மஹாகனி மரத்தினால் செய்யப்பட்ட பெட்டிகளை பயன்படுத்தி வருகிறார்.
- ஆரம்ப காலத்தில் ரூ 2300 க்கு தேனீக்களுடன் கூடிய வளர்ப்புப் பெட்டியை வாங்கியுள்ளார்.
- பின்னர் உற்பத்திச் செலவைக் குறைப்பதற்காகத்தானே வளர்ப்புப் பெட்டியைத் தாயாரிப்பதுடன் அதனை விற்பனை செய்தும் வருமானம் ஈட்டி வருகிறார்.

**பராமரிப்பு:**

தேனீ வளர்ப்பிற்க்கு முக்கியமானவை

**1. மாதம் இருமுறை அடிப்பலகையைச் சுத்தம் செய்தல் வேண்டும்:**

- முன் அடிப்பலகையில் உள்ள தேனீக்களை அப்புறப்படுத்த புகைப்பானைப் பயன்படுத்த வேண்டும்.

**2. சாதகமற்ற பருவமழையில் தேனீக்கு உணவு:**

- ஜனவரி முதல் ஜூன் வரை தேனீக்களுக்கு உணவு எளிதில் கிடைத்து விடும்.
- ஆனால் மற்ற மாதங்களில் தேனீக்களுக்கு உணவு பற்றாக்குறை ஏற்படும்போது தேனீ வளர்ப்பவர் சர்க்கரை கரைசலை தேனீக்களுக்கு உணவாக அளிக்க வேண்டும்.
- சரிசமமான அளவில் (1:1) சர்க்கரையும் தண்ணீரையும் கலந்த கரைசலுடன் காய்ந்த இலைகளைச் சேர்த்து சிறிய பாத்திரத்தில் சூப்பர் சேம்பரில் வைக்க வேண்டும்.
- காய்ந்த இலைகளானது தேனீக்கள் கரைசலில் மூழ்குவதைத்தடுக்க உதவுகிறது.
- தொடர் மழை மற்றும் கோடை காலங்களில் சர்க்கரைக் கரைசலை மாதம் 3முறை கொடுக்க வேண்டும்.

**3. பழைய தேனடையை நீக்குதல் :**

- புழுவறையில் (Brood chamber) கருமையாகவும், துர்நாற்றத்துடன் கூடிய அடைகளைப் பழைய அடைகள் என்பர். அடைகளைத் தேர்வு செய்து நீக்க வேண்டும்

**4. சூப்பர் சேம்பரை அமைத்தல்:**

- புழுவறையின் 6 சட்டங்களில் பழைய அடையைத் தேர்வு செய்து சூப்பர் சேம்பரில் அடித்தளமாகப் பயன்படுத்தப்படுகிறது.
- சூப்பர் சேம்பரின் நான்கு சட்டங்களுக்கு தேர்வு செய்த அடையைச் சட்டத்திற்கு ஒன்று வீதம் 4 கிடைமட்ட பகுதிகளாகப் பிரித்துச்சட்டத்துடன் இணைத்து வாழைநாரைக் கொண்டு கட்டப்படுகிறது.
- இதனை அடித்தளமாக்கொண்டு தேனீக்கள் சூப்பர் சேம்பரில் அடையை உருவாக்கும்.

**5. ராணி செல்கள்:**

- தேனீக்களின் எண்ணிக்கை அதிகமாகும் போது ராணித் தேனீ உள்ள சட்டத்தையும் சேர்த்து மூன்று சட்டங்களைப் புது தேனீ வளர்ப்புப்பெட்டிக்கு மாற்ற வேண்டும்.



- எனவே பழையப்பெட்டியில் உள்ள வேலைக்காரத் தேனீக்கள் அவசர கால ராணியை உருவாக்க முயற்சி செய்யும். எனவே அப்போது புழுவறையின் அடையின் அடிப்பகுதியில் 5-8 ராணி செல்கள் காணப்படும். அதில் ஆரோக்கியமான செல்லைத் தவிர்த்து மற்றவற்றை நீக்கி விடவேண்டும்.

**தேனீ வளர்ப்பின் சிக்கல்கள்:**

பயிர் பாதுகாப்பு மருந்துகளால் தேனீக்கள், பெருமளவில் பாதிக்கப்படுகிறது. மேலும் தேனீக்களின் எதிரிகளான எறும்பு, ஓணான், பல்லி, மஞ்சள் பட்டை குளவி போன்றவையும், மெழுகு அந்துப் பூச்சி ( wax moth) மற்றும் தாய் சேக் ப்ரூட் வைரஸ் (TSBV) இவற்றினாலும் தேனீக்களுக்குப் பாதிப்பு ஏற்படுகிறது.

**தேனை பதப்படுத்தும் முறை :**

பதப்படுத்துவதற்கு முன்னதாக தேன் அடையைச் சேகரித்து தேன் எடுக்கும் இயந்திரத்தில் செங்குத்தான முறையில் அடுக்கி கைப்பிடி மூலம் சுழற்றபடுகிறது. இதன் மூலம் தேன் வீணாவது குறைகிறது.

தேனை நேரடியாக விற்பனைச்செய்யாமல் அதனைப் பதப்படுத்தி தேனின் ஈரப்பதம் குறைப்பதால் தேனில் வைப்புதிறன் அதிகரிக்கபடுகிறது.

தேனை ஒரு பாத்திரத்தில் நிரப்பி நேரடியாக கொதிக்க வைக்காமல் மற்றொரு நீருள்ளப் பாத்திரத்தில் வைத்து பதப்படுத்தப்படுகிறது.

இதன் மூலமாக தேனடையில் இருந்து மெழுகும் பிரித்தெடுக்கப்படுகிறது

**இது முடிவுரையல்ல புகழுரை:**

இவ்வாறாக அவர் இரண்டு பெட்டிகளுடன் தன் பயணத்தைத் தொடங்கி தற்போது மொத்தம் 575 பெட்டிகளைக் கொண்டு செட்டிபட்டி, அந்தியூர், அத்தாணி, குமாரபாளையம், பூலாம்பட்டி போன்ற 28 இடங்களில் தேனீ வளர்பைச் சிறப்பாகச் செய்து வருகிறார்.

இவர் தேன் மட்டுமல்லாமல்,அச்சுகள் கொண்டு செய்யப்படும் மெழுகுப் பொருட்கள், தேன் வளர்ப்புப் பெட்டிகள், இயந்திரங்கள் என அனைத்தையும் விற்பனைச் செய்து லாபம் ஈட்டுக்கிறார்.

தேனின் விலை கிலோ ஒன்றுக்கு 500 மற்றும் அச்சுப் பொருட்களின் விலை 150 க்கு உள்ளுர்களிலும் ஒசூர், சென்னை, தர்மபுரி போன்ற நகரங்களிலும் கர்நாடகா, கேரளா, ஆந்திர பிரதேசம் போன்ற வெளிமாநிலங்களிலும் விற்பனை செய்து வருகின்றார்.

தேனீ வளர்ப்பு மட்டுமல்லமால் வாத்து, முயல், மாடு, கோழி, ஆடு, புறா மற்றும் மீன் வளர்ப்பு மூலமாகவும் வருமானம் ஈட்டுகிறார்.

இப்படிக்கு
கிராம தங்கல் திட்டம் மாணவிகள்
எடப்பாடி வட்டம், சேலம் மாவட்டம்
சுபிக்ஷா, சுருமி சுபையர், சுஷ்மிதா,
சுவாதி, தாமரை தர்ஷ்ணா, வானதி, வினிதா,
விஷ்ணுபிரியா, மற்றும் யமுனாதேவி.

**“உழவனின் நண்பனான மண்புழுவை மட்டுமில்லாது உழவனின் தேவதையான தேனீக்களையும் காப்போம்..! விவசாயம் வளர்ப்போம்..!!”**



# சிகரம் தொடும் சிப்பிகாளான்

**"சிறுதுளி பெருவெள்ளம்"** என்பதற்கிணங்க ஒரு சிறிய நுண்ணுயிரி அதிக ஊட்டச்சத்துள்ள உணவாக மாறுவதே நம் இயற்கையின் அதிசயம். சேலம் அம்மாபாளையத்தைச் சேர்ந்த செல்வி.கனிமொழி (நுண்ணுயிரியியல்) நுண்ணுயிரியியலின் மீது கொண்ட ஆர்வத்தினால் காளான் வளர்ப்பில் ஈடுபட்டுள்ளார். பல தடைகளை உடைத்தெறிந்து ஒரு இளம் தொழில் முனைவராக இன்றைய இளைஞர்களுக்கு முன்னுதாரணமாக வாழ்ந்து வருகிறார்.

**சிப்பிகாளான் :**

காளான் என்பது ஒருவகையான பூஞ்சை ஆகும். ‘‘நேற்று பெய்த மழையில் இன்று முளைத்த காளான்’’ என்று பெரியவர்கள் கூற கேள்விப்பட்டிருக்கிறோம். உலகளவில் 13 வகையான காளான்கள் உண்ணத்தகுந்தவையாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அதில் சிப்பிகாளானும் ஒன்று. இவை ப்ளூரோடஸ் வகையை சேர்ந்தவையாகும். சிப்பிகாளான்கள் பல்துறை மற்றும் பல ஆசிய உணவுகளில் ஒரு ஒருங்கிணைந்த பகுதியாக அவை அங்கம் வகிக்கின்றன.

**வளர்ப்பு முறை :**

வெளிச்சமிக்க காற்றோட்டமான தென்னங்கீற்று வேய்ந்த 6 குடில்கள் காளான் சாகுபடி செய்ய பயன்படுத்தப்படுகிறது. அவ்வறையில் 23 – 25 செல்சியஸ் வெப்பநிலையும், காற்றின் ஈரப்பதம் 85 சதவிகித்திற்கு மேலும் இருக்க வேண்டும். தரையில் பரப்பிலுள்ள மணலையும் அறையின் சுவர்களில் ஒட்டி உட்புறத்தின் தொங்க விடப்பட்டிருக்கும் சாக்கு படுதாக்களையும் தண்ணீரால் நனைத்து தேவையான சூழ்நிலையை அவர்கள் உருவாக்குகிறார்கள்.

காளான் வளர்ப்பிற்கு தேவையான முக்கிய மூலபொருளான (spawn) ஸ்பான் திருச்சி மற்றும் கோயம்புத்தூர் போன்ற பகுதிகளில் இருந்து பெறப்படுகிறது. சிப்பிகாளான் வளர்க்க பாலிதீன் பைகளில் உருளை படுக்கைகள் நெல் வைக்கோல் கொண்டு தயாரிக்கப்படுகிறது. குடிலைச் சுற்றியும் சீரான தட்ப வெப்பநிலையை உருவாக்க வாழை மற்றும் கற்றாழை சாகுபடி செய்கின்றனர். காளானை வித்திட்ட பிறகு 18 முதல் 21நாட்கள் கழித்து காளான் அறுவடை செய்யப்படுகிறது. 1 கிலோ காளான் 200 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது.

**மதிப்பு கூட்டுதல்:**

எந்தவொரு பொருளுக்கும் அதன் மதிப்பை கூட்டும் போது விலை பன்மடங்காகிறது. செல்வி. கனிமொழி மற்றும் அவரது குழுவினர் இணைந்து காளானில் பல்வேறு மதிப்புகூட்டு பொருள்களை உற்பத்தி செய்து விற்பனை செய்கின்றனர்.



அவை பின்வருமாறு,

- காளான் ஊறுகாய்
- காளான் பவுடர்
- உலர்ந்த காளான்
- காளான் ஜாம்

இத்தகைய உணவுப் பொருட்கள் சுவைமிக்கதாகவும், மக்களிடம் அதிக வரவேற்பையும் பெற்றுள்ளது. இதன் மருத்துவ குணத்தை உணர்ந்த மக்கள் இவர்களின் தினசரி வாடிக்கையாளர்களாக மாறுவது குறிப்பிடத்தக்கது.

**சிப்பிகாளான் ஊட்டச்சத்து அம்சங்கள் :**

சிப்பிகாளான்களில் வைட்டமின், கால்சியம், பொட்டாசியம், பாஸ்பரஸ் மற்றும் தாது உப்புகள் அதிக அளவில் உள்ளன. பாரம்பரிய சீன



மருத்துவத்தில் சிப்பிகாளான்கள் பலவிதமான உடல் நலப் பிரச்சனைகளுக்கு சிகிச்சையளிக்கப் பயன்படுத்தப்படுகிறது. உணவில் சிப்பிகாளான்களை தவறாமல் உட்கொள்வது இதய நோய்கள், இரத்த அழுத்தம், புற்றுநோய் மற்றும் நீரழிவு நோய்களின் அபாயத்தை குறைக்கிறது. மேலும் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கிறது.

**முடிவுரை :**

கொரோனா காலத்தில் ஆரம்பித்த இந்த முயற்சியானது இன்று வரை பல தடைகளை தாண்டி வெற்றி நடைபோடுவதற்கு செல்வி. கனிமொழி அவர்களின் விடாமுயற்சியே காரணம் ஆகும். மேலும் இங்கு காளான் வளர்ப்பு குறித்து மகளிர்களுக்கு பயிற்சி வகுப்பு அளிக்கப்பட்டு அதற்கான சான்றிதழும் வழங்கப்படுகிறது. வளர்ந்து வரும் இளம் தொழில் முனைவரான அப்பெண்மணியினுடனான எங்களின் பயணம் மிகவும் ஊக்கமளிக்கும் வகையில் அமைந்தது.

இப்படிக்கு
கிராம தங்கல் திட்டம் மாணவிகள்
பணமரத்துப்பட்டி வட்டம், சேலம் மாவட்டம்
அனுசுயா, அர்ச்சனா, ஆர்த்தி,
அட்சயா, பெனிஷா, பூமிகா, தேவி பிரியா,
தேவிகா, தரணி தேவி, கிரிஜா

# கோமாதாவின் கோ-கிருபா



துளிர் விட்டு வளர்ந்து வரும் இயற்கை வழி விவசாயத்தின் ஒரு பெருந்துளிராக விளங்குவது சிக்கினாபுரம் கிராமத்திலுள்ள பண்ணை நாச்சாஸ் கோசாலை. நாட்டு மாடுகளின் சொர்க்கம் என்று அழைக்கப்படும் இப்பண்ணையில் கிர், சிந்தி, சாகிவால், காங்கயம், தர்பார்க்கர் போன்ற நாட்டு இன மாடுகள் காணப்படுகின்றன. மேலும்,

- மண்ணில்லா வேளாண்மை (Hydroponics)
- மாட்டுச்சாணக்கலவை பிரிவு (Slurry)
- பண்ணைக்குளம் (Farm pond)
- அசோலா (Azolla) ஆகியவை இவ்விடத்தின் சிறப்பம்சங்கள்

**வியப்பூட்டும் கோ கிருபா:**

பஞ்சகாவ்யா, தசகாவ்யா போன்ற வேளாண் இடுபொருள்களின் வரிசையில் கைகோர்த்துள்ளது கோ கிருபா அமிர்தம். கோ- பசு; கிருபா- தயவு; பசுவின் தயவால் கிடைப்பதால் கோ கிருபா என்றழைக்கப்படுகிறது. இத்திரவம் நன்மை பயக்கும் பாசிட்டிவ் பாக்டீரியாக்களால் ஆனது. மண்ணில் தெளிக்கும்பொழுது இந்நுண்ணுயிரிகள் பெருக்கம் அடைகின்றன. அவை பயிர்கள் ஊட்டச்சத்தை எளிதில் எடுத்துக் கொள்ளும்படி செய்து பயிர் வளர்ச்சியை மேம்படுத்துகின்றன.

**செய்முறை:**

- கோ கிருபா தாய் திரவம் 1 லிட்டர்
- வெல்லம் 2 கிலோ
- நாட்டு மாட்டு மோர் 2 லிட்டர் (புளிக்காதது)

- தண்ணீர் 200 லிட்டர்
- கோ கிருபா தெளிக்கப்படும் நிலத்தின் மண் ஒரு கைபிடி அளவு

நன்கு சுத்தம் செய்து காயவைத்த டிரம்மில் 200 லிட்டர் தண்ணீர் எடுத்துக்கொண்டு அதில் 2 கிலோ வெல்லத்தைச் கரைத்து கொள்ள வேண்டும்.

பின் கோ கிருபாவின் தாய் திரவம், மோர் மற்றும் மண் சேர்த்து தினமும் ஒரு வேளை கலக்க வேண்டும். இந்தக் கரைசல் ஐந்தாம் நாள் உபயோகிக்க ஏதுவாகின்றது.

**பயன்படுத்தும் முறை:**



- 2:15 விகிதத்தில் கோ கிருபா கரைசல் மற்றும் தண்ணீர் கலந்து ஒரு ஏக்கர் பயிர்களுக்குத் தெளிக்க வேண்டும்
- நீர்ப்பாசன வழியாகவும் உரமாக அளிக்கலாம்

**பயன்கள்:**

- 30-40 மடங்கு பயிர் வளர்ச்சியை அதிகரிப்பதால் பயிர் ஊக்கியாகக் கருதப்படுகிறது

**நோய் மேலாண்மை**

- 1 லிட்டர் கோ - கிருபாவுடன் 50 கிராம் மஞ்சள்தூள், 150 லிட்டர் வேப்பெண்ணை சேர்த்து கால்நடைகளின் மேல் இடுவதன் மூலம் தோல் நோய்களைக் (LSD) குணப்படுத்தலாம்

இத்தகைய நன்மைகளைக் கொண்ட இயற்கை வழி இடுபொருட்களைப் பயன்படுத்தி இயற்கைவழிவேளாண்மையை ஊக்குவிப்போம்.

**தயாரிப்போம் கோ கிருபா அமிர்தம்!**
**பயன் பெறுவோம் பலவிதம் !**
**மகசூல் பெறுவோம் சதம் சதம் !**

இப்படிக்கு
கிராம தங்கல் திட்டம் மாணவிகள்
தாராபுரம் வட்டம், திருப்பூர் மாவட்டம்
ஹர்ஷவர்த்தினி, ஹர்ஷினி,
ஹேமலதா, இர்பானா பர்வீன்,
ஜெயப்பிரதா, கரிஷ்மா,
கிருத்திகா, கோகிலா,
கௌஷிகா, லக்ஷண்யா.


# நலம் தரும் நாட்டு சர்க்கரை

நாம் அன்றாடம் சாப்பிட கூடிய உணவு பொருட்கள் ஒவ்வொன்றிற்கும் மாற்று இங்கு உள்ளது. உணவின் தரத்தை வைத்தே நாம் அவற்றை சாப்பிட வேண்டுமா..? வேண்டாமா..? என்பதை தீர்மானிக்க வேண்டும். நம் உடலுக்கு எல்லா வித ஆற்றலையும் தர கூடிய உணவு வகைகளை நாம் தவிர்த்து வந்தால், பல்வேறு விளைவுகள் வரும். அந்த வகையில் வெள்ளை சர்க்கரைக்கு மாற்றாக இந்த நாட்டு சர்க்கரை உள்ளது.

**“மனிதனின் நாக்கு உணரக்கூடிய ஆறு சுவைகளில் இனிப்பும் ஒன்று”**

உடலின் உள்ளுறுப்புகள் சரியான வகையில் இயங்க இனிப்பு சுவை கொண்ட உணவுகளில் இருக்கும் சர்க்கரையின் அளவு இரத்தத்தில் சரியான அளவில் இருக்க வேண்டும். இன்று பெரும்பாலானவர்கள் தங்களின் அன்றாட உணவுகளில் பல தீங்கிழைக்கும் வெள்ளை சர்க்கரையையே அதிகம் பயன்படுத்துகின்றனர். அதற்கு மாற்று தான் நமது பாரம்பரிய, பல நன்மைகளை அளிக்க கூடிய இனிப்பு பொருளான **“நாட்டு சர்க்கரை”. சேலம் மாவட்டத்தில்** உள்ள **காடையாம்பட்டி** கிராமத்தில் **கோவிந்தராஜ்** என்பவர் நாட்டு சர்க்கரையை தயாரித்து வருகிறார்.இதில் நாட்டு சர்க்கரை தயாரிக்கும் முறை மற்றும் பயன்படுத்துவதால் ஏற்படும் நன்மைகள் குறித்து இங்கு காண்போம்.

**செய்முறை:**



- நாட்டுச் சர்க்கரை என்பது பாரம்பரிய முறைப்படி, மரத்தால் செய்த செக்கு மாதிரியான ஆலையில் கரும்பை நசுக்கி, பெரிய மண் சட்டிகளில் நிரப்பி வைப்பார்கள்.
- “ஐநூறு லிட்டரிலிருந்து சுமார் 100 கிலோகிராம் சர்க்கரை கிடைக்கும்” என்று கோவிந்தராஜ் விளக்குகிறார். லேசான எ்.கினால் செய்யப்பட்ட ஒரு பிரம்மாண்டமான வாணலியில் சுமார் 1,000 லிட்டர் கொள்ளவு உடையது. அங்கு கரும்பு சாறு கொதித்து, இனிமையான மணம் கவிழ்ந்தது.
- பிறகு பெரிய செப்புக் கொப்பரைகளில் ஊற்றி அடுப்பில் வைத்துக் காய்ச்சப்படுகிறது.
- இரண்டு மணி நேரம் கொதித்த பின் 50 மிலி தேங்காய் எண்ணெய் அடுப்பில் இருந்து எடுக்கப்படுவதற்கு முன் ஊற்றப்படுகிறது. பிறகு மினுமினுப்பான கலவையை ஒரு கரண்டியில் எடுத்து பதம் பார்க்கின்றனர்.

- பாகு பதத்திற்க்கு வந்ததும் ஆறவைத்து 'தேய்ப்பு முட்டி' என்று சொல்லும் மர முட்டிகளை வைத்து, கட்டிகளை உடைத்து, தேய்ச்சுப் பொடியாக்கின்றனர் இதுதான் நாட்டுச்சர்க்கரை… இது முற்றிலும் இயற்கை முறையில் உருவானது

- அஸ்கா சர்க்கரை அதாவது சீனி, இயந்திரங்களின் முலம் இரசாயனப் பொருட்கள் இதை கலந்து செய்யப்பட்டது இரண்டிற்கும் இது மட்டும் தான் வித்தியாசம்…

**"ஆரோக்கியமான வாழ்க்கைக்கு நாட்டு சர்க்கரையை சாப்பிடுங்கள்"**

**பயன்கள்:**

- இதில் உள்ள நன்மைகள் ஏராளம்.



வெள்ளை சர்க்கரைக்கு பதில் இனி நாட்டு சர்க்கரையை பயன்படுத்தி வந்தால் உடல் பருமன் முதல் மாதவிடாய் வலி வரை அனைத்திற்கும் இது நன்மை தருமாம். இவற்றின் முழு பயன்பாட்டை பற்றி இனி அறிந்து கொள்வோம்.

- நாட்டுச் சர்க்கரையில் கலோரிகள் குறைவு என்பதால் இவை நமது உடல் எடையை குறைக்க உதவுகிறது. எனவே நாட்டுச் சர்க்கரை பயன்படுத்துதல் நல்லது. குறிப்பாக குழந்தைகளுக்கு மிகவும் நல்லது.

- ஆஸ்துமா பிரச்னை போன்றவை உள்ளவர்கள் நாட்டுச் சர்க்கரை எடுத்துக்கொள்வது நல்லது. எனவே தினசரி டீ, காபிக்குக் பதிலாக பாலில் நாட்டுச் சர்க்கரையைப் பயன்படுத்தலாம். இரத்தத்தை சுத்திகரிக்கிறது நமது உடலில் ஓடும் ரத்தத்தில் நாம் உண்ணும் உணவு மற்றும் அருந்தும் பானங்களில் இருக்கும் பல தீங்கான பொருட்கள் கலந்து விடுகின்றன. நாட்டு சர்க்கரையை நாம் உண்ணும் உணவுகளில் அதிகம் பயன்படுத்துவதால் ரத்தத்தில் உள்ள அசுத்தங்களை நீக்கி ரத்தம் சுத்தமாக்கபடுகிறது.

**நோய் எதிர்ப்பு சக்தி:**

நமது உடலிற்க்கு எத்தகைய வெளிப்புற நோய்தொற்று கிருமியும் ஏற்படாமல் காப்பது நமது உடலில் இயற்கையாகவே இருக்கும் நோய் எதிர்ப்பு சக்தியாகும். இதை வலுவூட்டும் வேலையை செய்யக்கூடியது நாட்டு சர்க்கரை.

**மலச்சிக்கல்:**

பொதுவாக இனிப்பு உணவுகளை அதிகளவு உண்பவர்களுக்கு மலச்சிக்கல் ஏற்படும் வாய்ப்புகள் அதிகம். அதிலும் வெள்ளை சர்க்கரை பயன்படுத்தி செய்யப்படும் இனிப்புகள் இந்த பிரச்சனையை ஏற்படுத்தும்.

நாட்டு சர்க்கரையை வெள்ளை சர்க்கரைக்கு பதில் பயன்படுத்துவதால் குடல்களுக்கு வலுவூட்டி மலச்சிக்கல் போன்றவை ஏற்படாமல் காக்கும்.

இது ஜீரணத் சக்தியை அதிகரித்து உடலை ஆரோக்கியமாக வைத்துக் கொள்ள உதவுகிறது.

**நீரிழிவு நோய்:**

வெள்ளை சர்க்கரையில் உள்ள சில ரசாயனங்கள் நமது உடலில் இன்சுலின் சுரப்பை பாதித்து, ரத்தத்தில் சர்க்கரையின் அளவை அதிகரித்து, சர்க்கரை வியாதி அல்லது நீரிழிவு நோயை ஏற்படுத்த கூடும். நாட்டு சர்க்கரை பயன்பாடு இத்தகைய பாதிப்புகளற்றது.

**புற்று நோய்:**

கரும்பு சாறு மற்றும் நாட்டு சர்க்கரையை அதிகளவு பயன்படுத்தும் மேற்கு இந்திய தீவு குடிமக்களுக்கு புற்று நோய் பாதிப்புகள் வெகுவாக குறைந்தே காணப்படுகின்றன என ஆய்வாளர்கள் கூறுகின்றனர். எத்தகைய உணவுப்பொருட்களிலும் உள்ள தீய இரசாயன தன்மையை முறிக்கும் திறன் நாட்டு சர்க்கரைக்கு உள்ளதால் புற்று நோய் பாதிப்புகள் ஏற்படாமல் காக்க, இதை உட்கொள்ளலாம் என்பது ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

**வைட்டமின்கள்:**

- நாட்டுச் சர்க்கரையில் விட்டமின் பி உள்ளது. எனவே முகப்பொலிவு மற்றும் அழகு சாதனப் பொருட்களில் வெள்ளை சர்க்கரைக்கு பதில் நாட்டுச்சர்க்கரை பயன்படுத்தலாம்.



- நாட்டு சர்க்கரையில் கால்சியம், பாஸ்பரஸ், மெக்னீசியம், ஜின்ங்., செலினியம், இரும்புசத்து போன்றவை நிறைந்துள்ளது.

**வேதி பொருட்கள் அற்ற சர்க்கரை...!**

- வெள்ளை சர்க்கரையை போன்று இதில் எந்த வித வேதி பொருட்களும் இல்லை. முற்றிலுமாக இயற்கை ரீதியாகவே இதனை தயார் செய்வதால், இதில் எண்ணற்ற **தாதுப்பொருட்கள், ஊட்டச்சத்துக்கள், வைட்டமின்கள்** நிறைந்திருக்கும். அத்துடன், எந்த வித பாதிப்பையும் இது உடலுக்கு தராது.

**“நாட்டுச் சர்க்கரை இல்லாத ஒரு நாள் சூரிய ஒளி இல்லாத நாள் போன்றது”**

**முடிவுரை:**

முந்தைய காலத்தில் எல்லோரும் இதைத்தான் சாப்பிட்டுக் கொண்டு இருந்தார்கள். அப்போது எந்த நோயும் வந்ததில்லை. ஆனால் தற்போது நிறைய உடல் பிரச்சினை வருகிறது. இந்த வெள்ளை சக்கரை வருவதற்கு முன் நாம் அதிகமாக பயன்படுத்தியது என்னவென்றால் அது நாட்டு சர்க்கரையே. ஆதலால் நாம் அனைவரும் நாட்டு சர்க்கரையை பயன்படுத்தி வளமாக வாழ்வோம்.

இப்படிக்குக்
காடையாம்பட்டி வட்டம்,
சேலம் மாவட்ட மாணவர்கள்.
அமர்நாத், ஆனந்த், ஆனந்தவேலன்,
அருணாச்சலம், அஸ்வின்த்,
அதுல்கிருஷ்ணா, பாலாஜி,
தீபன்குமார், தேவ்நாத், தினேஷ்.

# பயிர் மகசூல் நிர்ணயப் போட்டி
# விளைவித்தவனை உயர்விப்போம்!




Crop Cutting Experiment (CCE) பயிர் விளைச்சல் போட்டி என்பது ஒரு நிலத்தில் ஒரு குறிப்பிட்ட பயிரின் மகசூலை அளவிடும் செயல்முறையாகும். முன்னர் இப்போட்டியானது குறிப்பிட்ட நிலத்தில், வரையறையற்ற மாதிரிகளைத் தேர்ந்தெடுத்து நடத்தப்பட்டது. அவையே அந்த மொத்த பகுதியின் பிரதிபலிப்பாகத் திகழ்ந்தது.

**பயிர் மகசூலை நிர்ணயிக்கும் காரணிகளாக,**

- தானிய எடை
- உயிர் பொருள் எடை
- தானியத்தின் ஈர்ப்பதம்

ஆகியன இருந்து வந்தன.

ஒரு மாவட்டத்தில் நடைபெறும் பயிர் விளைச்சல் போட்டியில் விவசாயி கலந்து கொள்ள வேண்டுமெனில் குறைந்தபட்சம் அம்மாவட்டத்தை சேர்ந்த மூன்று விவசாயிகள் பதிவு செய்ய வேண்டும். அப்படியானால் மட்டுமே அம்மாவட்டத்தில் அப்போட்டியானது நடத்தப்படும்.போட்டி நடைபெறும் நிலமானது அளவிடப்பட்ட பிறகே அந்நிலத்தில் மகசூல் நிர்ணயிக்கப்படும்.

அறுவடையானது குறைந்தபட்சம் ஒரு ஏக்கர் நிலத்தில் செய்யப்பட வேண்டும். இப்போட்டியானது தமிழ்நாடு அரசு சார்பில் வேளாண்துறையில் நடத்தப்படும். மாநில அளவில் இப்போட்டியில் கலந்துகொள்ள பதிவுக்கட்டணமாக ரூபாய் நூறு மற்றும் மாவட்ட அளவில் பதிவுக்கட்டணமாக ரூபாய் ஐம்பதும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

கிராம தங்கல் திட்டத்தில் எங்களுக்கு ஒதுக்கப்பட்ட பகுதி திருச்செங்கோடு வட்டம்

நாமக்கல் மாவட்டம். நாமக்கல் மாவட்டத்தில் இப்போட்டியானது கரும்பு, நிலக்கடலை, பச்சைபயிறு, மக்காச்சோளம் ஆகிய நான்கு பயிர்களுக்கு நடைபெறும்.

பரிசு பெறுவதற்கான குறைந்தபட்ச மகசூல் அளவு:

**கரும்பு: 50 டன்/ஏக்கர்**
**நெல்: 4000 கிலோ/ஏக்கர்**
**நிலக்கடலை : 2000 கிலோ/ஏக்கர்.**

கரும்பின் தரத்தை அறிய நீளமான ஐந்து கரும்புகள் தேர்ந்தெடுக்கப்பட்டு எடை போடப்படும். போட்டியில் வெற்றிபெறும் கரும்பு மற்றும் நிலக்கடலை விவசாயிக்கு முதல் பரிசாக ரூபாய் இருபத்தைந்தாயிரமும், இரண்டாம் பரிசாக ரூபாய் பத்தாயிரமும் வழங்கப்படும்.

பச்சைப்பயிறு மற்றும் பிற பயிர்களுக்கு முதல்பரிசாக ரூபாய் பதினைந்தாயிரம், இரண்டாம் பரிசாக பத்தாயிரம் வழங்கப்படும். இந்த போட்டிக்கான சான்றிதழ் மற்றும் பரிசுத்தொகை ஒவ்வொரு ஆண்டும் குடியரசு தினத்தன்று (ஜனவரி 26) வழங்கப்பட்டு வருகிறது.

கிராம தங்கல் திட்டத்தில் திருச்செங்கோடு வட்டத்தில் உள்ள இறுதியாண்டு மாணவிகளாகிய நாங்கள் பன்னீர்குத்திபாளையத்தில் நடைபெற்ற கரும்பு பயிருக்கான பயிர் விளைச்சல் போட்டியில் கலந்துகொண்டு பார்வையிட்டோம்.

இப்போட்டியானது ஈரோடு இணைவேளாண் இயக்குநர் சின்னுசாமி, நாமக்கல் துணை வேளாண் இயக்குநர் நாச்சிமுத்து, மாவட்ட ஆட்சியரின் வேளாண் உதவியாளர் முருகன், முன்னோடி விவசாயி ரகுநாதன் மற்றும் திருச்செங்கோடு உதவி வேளாண் இயக்குநர் லோகநாதன் ஆகியோரின் தலைமையின் கீழ் நடைபெற்றது. மாநில அளவிலான போட்டி பாலமுருகன் என்பவர் தோட்டத்திலும், மாவட்ட அளவிலான போட்டி பாலமுருகன் என்பவர் தோட்டத்திலும் நடைபெற்றது. நல்லுசாமி என்பவர் பயிரிட்டுள்ள கரும்பு இரகம் 11015. இந்த இரகம் செவ்வழுகல் நோய்க்கான எதிர்ப்புத்தன்மை உடையது. இப்போட்டி நடைபெற்ற நிலமானது முற்றிலும் இயற்கை முறையில் சாகுபடி செய்யப்பட்ட கரும்பாகும்.இவர் ஒரு ஏக்கருக்கு ரூ.40000 செலவு செய்துள்ளார். நாங்கள் இப்போட்டியை பார்வையிட்டு பயிர் விளைச்சல் போட்டி பற்றிய தகவல்களையும் அனுபவத்தையும் கள நிலை அறிவையும் பெற்றுக் கொண்டோம்.

இப்படிக்கு
கிராம தங்கல் திட்ட மாணவிகள்
திருச்செங்கோடு வட்டம்,
நாமக்கல் மாவட்டம்

லாவண்யா, மதிவதனி
மதுமித்ரா, மனோமித்ரா
நந்திதா, நிலா. நிவேதாஸ்ரீ
நிவிதா, பவித்ரா, பூங்குழலி.



# பழமையை நோக்கிய பயனம்

தஞ்சாவூர் மாவட்டம் திருவிடை மருதூர் வட்டம் கதிரமங்கலம் கிராமத்தில் 12 வருடமாக இயற்கை விவசாயம் செய்துவருபவர் மதிப்பிற்குரிய ஸ்ரீராம் ஐயா அவர்கள். இவர் B.Com மற்றும் B.Sc. (FARM MANAGEMENT) படித்துள்ளார். கடந்த 12 ஆண்டுகளாக இவர் 60 ஏக்கர் நிலத்தில் 120 பாரம்பரிய நெல் இரகங்கள் வளர்த்து பாரமரித்துக் கொண்டு வருகிறார். இவரது நிலம் பங்கேற்பு உத்தரவாத அமைப்பு (பிஜிஎஸ் இந்தியா) கீழ் அங்கீகரிக்கப் பட்டுள்ளது. தங்கப் பூ சம்பா, வாளன், மாப்பிளை சம்பா, பூங்கார், காட்டு யாணம், தூய மல்லி, இலுப்பை பூ சம்பா, கிச்சிலி சம்பா, கருப்பு கவுணி, சீரக சம்பா ஆகியவை இவர் பாதுகாத்து வரும் பாரம்பரிய இரகங்கள் சிலவாகும்.

**பங்கேற்பு உத்தரவாத அமைப்பு (பிஜிஎஸ் இந்தியா):**

பங்கேற்பு உத்தரவாத அமைப்பு (பிஜிஎஸ்இந்தியா) என்பது சர்வதேச அளவில் அங்கீகாரம் பெற்ற மற்றும் உள்நாட்டில் ஆர்கானிக் தர உத்தரவாதத்தை மேம்படுத்தும் ஒரு அமைப்பாகும். இது பங்குதாரர்களின் செயலில் பங்கேற்பதன் அடிப்படையில் உற்பத்தியாளர்களுக்கு சான்றளிக்கிறது. இவ்வமைப்பானது பங்கேற்பு அணுகுமுறை, நம்பகத்தன்மை மற்றும் வெளிப்படைத்தன்மை ஆகியவற்றின் அடிப்படையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. மேலும் இந்திய அரசாங்கத்தின் வேளாண்மை அமைச்சகத்தில் வேளாண்மை மற்றும் கூட்டுறவுத் துறையின் கீழ், செயலில் பங்கேற்பதன் மூலம் ஆர்கானிக் விவசாயிகள் உற்பத்தியாளர்களால் செயல்படுத்தப்பட்டு கட்டுப்படுத்தப்படுகிறது. இந்த முயற்சியின் மூலம், இந்தியா போன்ற சகோதரத்துவமிக்க நாட்டில் விவசாயத்தின் தரத்தை மேம்படுத்தவும், நாட்டின் சந்தையின் வளர்ச்சியை ஊக்குவிக்கின்றது. இந்தக் கட்டுரை, இத்திட்டத்தின் கொள்கைகளையும் அதன் முக்கிய அம்சங்களையும் ஆராய்கிறது.

**பிரித்வி பாரம்பரிய விவசாயிகள் அறக்கட்டளை:**

இந்த அறக்கட்டளையின் முக்கிய நோக்கம் இயற்கை விவசாயம், நாட்டு மாடுகளின் வளர்ப்பை ஊக்குவிப்பது, அரசு மற்றும் பிற அமைப்புகளிடமிருந்து இயற்கை அங்கக வேளாண் விலை பொருள் சான்றிதழைப் பெறுவது போன்றவையாகும். விவசாயிகளின் பயிர் வகைகள் மற்றும் வளங்களின் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் விவசாயிகளின் உரிமைகளை உறுதி

செய்தல், வர்த்தக முத்திரையைப் பெறுதல் மற்றும் அதற்கான சான்றிதழைப் பெறுதல் ஆகியவையும் இதில் அடங்கும். இந்த அறக்கட்டளையின் செயல்பாட்டில் விவசாயம் மற்றும் இயற்கை விவசாயிகளின் சுய உதவி குழுக்களை நிர்வகித்தல் ஆகியவையும் அடங்கும்.

இதில், இயற்கை விவசாயம் தொடர்பான பயிற்சி வகுப்புகள் மற்றும் கூட்டங்கள் நடத்தி கிராம மக்களிடையே சூரிய ஆற்றல், சுற்று சூழலியல் மற்றும் நீர் பாதுகாப்பு, உள்ளூர் மூலிகைகள், அவற்றின் பயன்பாடு மற்றும் ஆர்கானிக் உள்ளீடுகள் பற்றியும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது.

இந்த அறக்கட்டளை விவசாயிகளுக்கான ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனமாக திறம்பட செயல்பட்டு வருகிறது.




**பாரம்பரிய நெல் வகைகளில் உள்ள மருத்துவ குணங்கள் :**

- **குள்ளக்கர்** : கெட்ட கொழுப்புகளின் அளவைக் குறைத்து, இரத்தத்தில் சர்க்கரையின் அளவைக் கட்டுப்படுத்துகிறது. மற்ற பாரம்பரிய நெல் வகைகளை காட்டிலும் இந்த அரிசியில் துத்தநாகம் மற்றும் இரும்புச்சத்து அதிக அளவில் உள்ளது.
- **கருப்புக்கவுணி** : புற்றுநோய் எதிர்ப்பு பண்புகளைப் கொண்டுள்ளது.
- **கிச்சலி சம்பா**: நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கிறது, தசைகளை பலப்படுத்துகிறது. மேலும் சருமத்தை பளபளப்பாக்க உதவுகிறது.
- **மாப்பிள்ளை சம்பா**: நீரிழிவு நோயை கட்டுப்படுத்தும், ஆண்மை அதிகரிக்கும்
- **பூங்கார்**: கர்ப்ப காலத்தில் சாப்பிடுவது, ஆரோக்கியத்தை மேம்படுத்துகிறது மற்றும் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கிறது, இதனை தொடர்ந்து உட்கொள்வதன் மூலம் கருவில் வளரும் சிசுவின் ஆரோக்கியத்தை பாதுகாக்கிறது. மேலும் தாய்ப்பால் சுரப்பை அதிகப்படுத்துகிறது.
- **காட்டு யாணம்**: புற்றுநோய் மற்றும் நீரிழிவுநோயை குணப்படுத்தும் பண்புகளை கொண்டதாகும்.
- **இலுப்பை பூ சம்பா**: ஹீமோகுளோபின் அளவை அதிகரிக்கிறது, சுவாசப் பிரச்சனைகளை தடுக்கிறது. மேலும் மூட்டு வலிகளுக்கு பயனுள்ளதாகவும் மற்றும் குழந்தைகளின் சளியையும் நீக்குகிறது
- **சேலம் சன்னா**: தசை, நரம்பு மற்றும் எலும்பை வலுவாக்கும்.
- **தங்கப் பூ சம்பா**: இளம்வயது குழந்தைகளுக்கு மிகவும் நல்லது.
- **வாளன்**: இளமைப் பருவத்தில் பெண்களுக்கு ஏற்படும் ஹார்மோன் மாற்றங்களைக் கட்டுப்படுத்துகிறது.

**விவசாயம் வாழவேண்டும்**
**விவசாயி ஆளவேண்டும்**

இப்படிக்கு
கிராம தங்கல் திட்டம் மாணவர்கள்
திருப்பனந்தாள் வட்டம், தஞ்சாவூர் மாவட்டம்
ரகுநாதன், சக்தி அர்ஜுனன்
சஞ்சய், சங்கள்ப், சந்தோஷ் குமார்,
சிபி செல்வம், சித்தார்த் அம்பேத், சிவசூர்யா,
சோமசுந்தரம், ஸ்ரீ யோகேஷ்.



# செங்காந்தள் !! ஓர் பார்வை

**"நறுந்தண் சிலம்பின் நாறுகுலைக் காந்தள்"**

என சங்க இலக்கியங்கள் சிறப்பிக்கும் மலர், செங்காந்தள் மலர். இது நம் தமிழ்நாட்டின் மாநில மலராகும் இதனை கண்வலிப்பூ, கார்த்திகைப்பூ, அக்னிசலம் என்றும் கூறுவர். இவை ஆப்பிரிக்கா, மற்றும் ஆசியா கண்டத்தில் அதிகம் காணப்படுகின்றன. இம்மலர்கள் தேனீக்களின் ஆரவாரத்துடன் கண்ணைக் கவரும் சிவப்பு நிறத்தில் மிளிரும். இவை கார்த்திகை திங்களில் மலைகளிலும் வேலிகளிலும் பூத்துக் குலுங்கும்.

இவை தமிழகத்தின் மேற்கு பகுதிகளான திருப்பூரின் தாராபுரம், திண்டுக்கல்லின் ஒட்டன்சத்திரம், அம்பிளிக்கை, கரூரின் அரவாக்குறிச்சி, சேலத்தின் ஆத்தூர் மற்றும் ஜெயங்கொண்டம் ஆகிய இடங்களில் சுமார் 2000 ஹெக்டேர் பரப்பளவில் சாகுபடி செய்யப்படுகிறது.

இதன் கிழங்கு மற்றும் விதைகளில் கோல்ஸிசின் மற்றும் சுபர்பின் போன்ற ஹல்கலாய்டுகள் காணப்படுகின்றன. இதன் விதைகளில் 0.20% கொல்ஸிசின் உள்ளது.

**பயன்கள் :**

- இதன் விதைகளிலுள்ள கொல்ஸின் பயிர் மேம்பாட்டு ஆராய்ச்சியில் சடுதி மாற்றத்திற்காகப் பயன்படுகிறது.
- புற்றுநோய் கட்டிகள் பரவாமல் தடுக்கிறது.
- பாம்புக்கடி, தேள்கடி போன்றவற்றிற்கு மருந்தாகப் பயன்படுகிறது.
- இதன் வேரில் பெறப்பட்ட தைலம், மேகநோய், சொறி, சிரங்கு, படை ஆகிய நோய்களை குணப்படுத்த உதவுகிறது.
- வாதநோய், மூட்டுவலி, தொழுநோய், வெண்குஷ்டம் போன்றவற்றை குணப்படுத்தவும் பயன்படுகிறது.
- இது பிரசவ வலியைத் தூண்டும் நல்ல மருந்தாகும்.

தமிழகத்தில் சாகுபடி செய்யப்படும் இம்மலர்களின் விதைகள் மற்றும் கிழங்குகள், மேலைநாடுகளான அமெரிக்கா, மற்றும் ஐரோப்பா ஆகியவற்றிற்கு பெருமளவில் ஏற்றுமதி செய்யப்படுகிறது. தமிழகத்தின் தேசிய மலராக திகழும் செங்காந்தள் மலர், நம் இந்திய தாய்திரு

நாட்டினை பூர்விகமாக கொண்டிருப்பினும், இதிலிருந்து மருந்து தயாரிக்கும் தொழில்நுட்பங்கள் மேலைநாடுகளில் மட்டுமே இருப்பது வருத்தத்திற்குரியது. நாங்கள் ரெட்டியார்சத்திரம் வட்டாரத்திலுள்ள எல்லப்பட்டி கிராமத்தில் வசிக்கும் திரு. ராஜ்குமார் அவர்களின் செங்காந்தள் மலர் சாகுபடி செய்யும் வயலினை காணச் சென்றோம். அவர் கடந்த 3 ஆண்டுகளாக எட்டு ஏக்கர் நிலத்தில் இம்மலரினை பயிரிட்டு வருகிறார். அவருடனான உரையாடலில் நாங்கள் கற்றவை.

**இரகங்கள் :**

செங்காந்தள் மலரில் ஒட்டு இரகங்கள் கிடையாது. எனவே வள்ளியூர் கிழங்கு (திருநெல்வேலி), ஆந்திரா கிழங்கு, தாலவாடி மற்றும் மூலனூர் கிழங்கு (ஈரோடு) ஆகிய நாட்டுரகங்கள் சாகுபடிக்கு பயன்படுத்தப்படுகின்றன. இதில் ஆந்திரா கிழங்கு விளைச்சல் தரவல்லவை.

**மண் மற்றும் தட்பவெப்பநிலை:**

செம்மண் மற்றும் செம்பொறைமண் செங்காந்தள் மலரின் சாகுபடிக்கு ஏற்றது. மண்ணின் கார அமிலத்தன்மை 6 முதல் 7 வரை இருக்கவேண்டும். இதன் சாகுபடிக்கு மிதமான வெப்பநிலை தேவைப்படுகிறது. இதற்கான மழை அளவு 70 செ.மீ ஆகும்

**நிலத்தை தயார்செய்தல்:**

நிலத்தினை நன்றாக இரண்டு,மூன்று முறை உழவு செய்ய வேண்டும்.பின்பு 10 டன் தொழு உரமிட்டு மறுமுறை உழவு செய்ய வேண்டும்.பின்பு ஆழச்சால் அகலப்பாத்தி அமைக்க வேண்டும்.

**விதை நேர்த்தி மற்றும் நடவு செய்தல்:**

செங்காந்தள், கொடி போல் படரக்கூடியவை. இக்கொடி மண்ணிற்கு அடியில் உள்ள கிழங்குகளிலிருந்து வளரக்கூடியவை. இக்கிழங்குகள் கலப்பை போல் இருப்பதால் இதனை "கலப்பைக் கிழங்கு" என்று கூறுவர். கிழங்கின் ஒவ்வொரு முனையிலிருந்தும் புதிய செடி முளைக்கும் கிழங்குகளை விதைக்கும்முன் 0.1% கார்பன்டஸிம் பூஞ்சானமருந்து தெளித்து அரைமணி நேரம் கழித்து விதைக்க வேண்டும்.

ஒரு ஏக்கருக்கு 300 முதல் 400 கிழங்குகள் தேவைப்படுகின்றன. கிழங்குகளை 30 செ.மீ இடைவெளியில் ஊன்ற வேண்டும்.

**வேலி அமைத்தல் :**

கிழங்குகளை ஆடி மாதத்தில் நடவு செய்தால் ஆவணி மாதத்தில் முளைத்து புரட்டாசி மற்றும் ஐப்பசி மாதங்களில் கொடியோடி பரவும். கொடிகள் பற்றி வளர கிளுவை மரக் குச்சிகள் அல்லது கம்பி வேலிகள் அமைத்தல் வேண்டும்.

**மகரந்த சேர்க்கை:**

பூக்களின் தன்மகரந்தசேர்க்கை திறன் குறைவாக இருக்குமென்பதால் காய்களின் எண்ணிக்கையை அதிகரிக்க அயல்மகரந்தச்சேர்க்கை செய்ய வேண்டும். ஒரு கொடியில் பூக்களிலிருந்து மகரந்தம் வெளிப்படும் போது அதனை மறுகொடியில் இருக்கும் பூவுடன் உரச வேண்டும். அப்பொழுது மகரந்தம் பூவினினுள்ள சூலகத்திற்கு சென்று காய் உருவாகும். இதனை பூக்கள்பூக்கும் காலத்தில் தினமும் காலை 7.30 முதல் 10 மணி வரை செய்வர்.

**நீர் மேலாண்மை :**

சொட்டு நீர் பாசன முறை மிகவும் உகந்தது, இதன் மூலம் சாகுபடி செய்வதால் தண்ணீர் தேவை மிகவும் குறைக்கப்படுகிறது. கிணற்று பாசனம் மூலம் தண்ணீர் தேவையை பூர்த்தி செய்கின்றனர். கிழங்குகளை விதைத்த உடனும் அதன்பின் இரண்டு நாட்களுக்கு ஒரு முறையும் நீர்பாய்ச்சுகின்றனர். அறுவடை செய்யும் நேரத்தில் பாசனத்தின் அளவு குறைக்கப்படுகிறது.

**ஊட்டச்சத்து மேலாண்மை:**

ஒரு ஹெக்டேருக்கு 120 கிலோ கிராம் தழைச்சத்து, 50 கிலோ கிராம் மணிச்சத்து,

75 கிலோகிராம் சாம்பல் சத்து தேவைப்படுகிறது. தழைச்சத்தில் பாதியையும், மணிச்சத்து மற்றும் சாம்பல் சத்தில் முழுமையாகவும் அடியுரமாக இட வேண்டும். மீதமுள்ள தழைச்சத்தினை இரண்டாகப் பிரித்து 30 நாட்களிலும் 60 நாட்களிலும் அளிக்கின்றனர்.

**களை மேலாண்மை:**

கிழங்கு முளைத்து வளரும் பொழுது முதல் களை எடுக்க வேண்டும். அதன் பின் களைகள் அதிகமாக காணப்படும் பொழுது மட்டும் களைகளை அகற்றுகின்றனர். சொட்டுநீர் பாசன முறை இருப்பதால் களைகள் வளருவது கணிசமாக குறைகிறது.

**பயிர் பாதுகாப்பு:**

கொடிகளில் காணப்படும் பூச்சிகள் மற்றும் நோய்களுக்கு வாரம் ஒருமுறை புரோவென்பாஸ் மருந்தடிக்கின்றனர். பச்சை புழுக்கள் காணப்படும் பொழுது 0.1% புரோவென்பாஸ் மருந்தை தெளிக்க வேண்டும்.

இலைகருகல் நோய்க்கு 0.1 % கார்பன்டஸ்ம் தெளிக்கின்றனர்.

**அறுவடை :**

கிழங்கு விதைத்த ஆறு மாதத்திற்குள் காய்கள் பழுப்பு நிறத்தில் மாறி வெடிக்க தொடங்கும். பின் காய்களை அறுவடை செய்து இரண்டு வாரத்திற்கு நிழலில் உலர்த்தி விதைகளை பிரித்தெடுக்கின்றனர் பின் விதைகளையும் இரண்டு வாரத்திற்கு நிழலில் உலர்த்தினர். சனல்பைகளில் சேகரித்து இடைத்தரகர்கள் மூலமாக விற்பனை செய்யப்படுகிறது. ஒரு ஹெக்டேர்க்கு சுமார் 300 கிலோகிராம் விதைகள் விதம். விதைகள் ரூ.1400க்கு விற்க்கப்படுகிறது.

**சந்தைப்படுத்துதல் :**

விவசாயிகளுக்கு செங்காந்தள் சாகுபடியில் சந்தைப்படுத்துதல் பெரும் சவாலாக உள்ளது. விலையில் ஏற்ற இறக்கங்கள் அதிகம் காணப்படுகின்றன. தமிழகத்தில் சாகுபடி செய்யப்படும் விதைகள் மற்றும் கிழங்குகள், மேலைநாடுகளான அமெரிக்கா, ஐரோப்பா ஆகியவற்றிற்கு பெருமளவில் ஏற்றுமதி செய்யப்படுகிறது. தமிழகத்தின் தேசிய மலராக திகழும் செங்காந்தள் மலர், நம் இந்திய தாய் திரு நாட்டினை பூர்விகமாக கொண்டிருப்பினும், இதிலிருந்து மருந்து தயாரிக்கும் தொழில்நுட்பங்கள் மேலைநாடுகளில் மட்டுமே இருப்பது வருத்தத்திற்குரியது.

**சாகுபடியில் உள்ள சிக்கல்கள்:**

செங்காந்தள் மலரில் ஒட்டு இரகங்கள் கிடையாது. நாட்டு இரகங்களில் விளைச்சல் குறைவாக இருக்கும். இதனை கிழங்குகள் மூலமே வளர்க்க முடியும். பூ பூக்கும் தருணத்தில் அதிக மழை பெய்தால் பூக்கள் கருகி விளைச்சல் குறையும். இடைத்தரகர்களால் விவசாயிகள் மிகவும் பாதிப்படைகின்றனர். விளைச்சல் இருந்தும் உரிய விலை கிடைக்காமல் தவிக்கின்றனர். அரசின் நேரடி கொள்முதல் மற்றும் குறைந்தபட்ச ஆதாரவிலை கிடைக்கப்பெறவில்லை. வேலை ஆட்கள்குறைவால் வேதனையடைகின்றனர்.

இதற்கு வேளாண் துறையின் வழிகாட்டுதலும், இயந்திரங்களை உபயோகிப்பதும்,சாகுபடி செலவுகளை குறைத்து தேவைக்கேற்ப மருந்துகளை பயன்படுத்துவதுமே சிறந்த தீர்வாகும்.

இப்படிக்கு
கிராம தங்கல் திட்டம் மாணவிகள்
ரெட்டியார்சத்திரம் வட்டம், திண்டுக்கல் மாவட்டம்
அபிலாஷா, அபிராமி,
அபிஷியா ஜெய கிருபா, அகல்யா,
அக்ஷயா.A, அக்ஷயா.K, அமலா லின்சி,
அனாமிகா மோகன்,
ஆனந்தவினித்தா, அஞ்சலி.

# வதிலை இயற்கை விவசாயி ஒரு நேர்காணல்



கிராம தங்கல் திட்டத்தின்கீழ் வானவராயர் வேளாண் கல்லூரி மாணவர்கள் வீ. சுதேஸ், வெ. சுந்தர், ல. சுந்தரீஸ்வரன், ரெ. சுரேஷ்குமார், ஜி.சி.சூர்யா, ச.வருண்குமார். வெங்கடேஷ், ம.விஸ்வநாத்ஜீவன் ஆகியோர் திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை தாலுகா, கண்ணாபட்டி கிராமத்தைச் சேர்ந்த விவசாயி திரு. ஜெய்கணேஷ் அவர்களை சந்தித்தோம். திரு.ஜெய்கணேஷ் நான்கு வருடங்களாக இயற்கை வேளாண்மை செய்து வருகிறார். இவர் தனக்கு சொந்தமான 4 ஏக்கர் நிலத்தில், மூன்று ஏக்கரில் வாழை பயிரிட்டுள்ளார். அவர் பயிரிட்டுள்ள வாழை ரகங்களாவன ரஸ்தாலி, கதளி, நேந்தரம், கற்பூரவல்லி, செவ்வாழை, பேயன், மட்டி, மலைவாழை. மேலும் வாழைக்கு இடையில் ஊடுபயிராக மஞ்சள், இஞ்சி, சேனைக்கிழங்கு, வெங்காயம் ஆகியவற்றை பயிரிட்டுள்ளார். 60 செண்ட் நிலத்தில் பருத்தி பயிரிட்டுள்ளார். மேலும் 2 ஏக்கர் குத்தகை நிலத்தில் பாரம்பரிய நெல் இரகமான சீரக சம்பா பயிர் செய்துள்ளார். நெல்லுக்கு இடையில் அசோலா விளைவித்து அதனையும் நெல்லுக்கு இயற்கை உரமாக பயன்படுத்துகிறார். கடந்த வருடம் ஆத்தூர் கிச்சடி சம்பா, மாப்பிள்ளை சம்பா, கல்லுண்டை சம்பா, கருப்புகவுனி, காலாபத் ஆகிய நெல் இரகங்களை பயிரிட்டிருந்ததாகவும், அறுவடையின் போது ஏற்பட்ட சிரமத்தின் காரணமாக தற்போது சீரகசம்பா மட்டும் பயிரிடுவதாக கூறினார். பாசனத்திற்கு வைகை ஆற்று நீரை பயன்படுத்துகிறார்.

**இயற்கை வேளாண்மையின் தேவை:**

இயற்கை வழி வேளாண்மையில் முக்கிய தேவையாக அவர் கூறியதாவது, " நஞ்சில்லா உணவு உற்பத்தி செய்வது". தான் உற்பத்தி செய்யும் உணவானது சென்றடையும் எவருக்கும் கேடு விளைவிப்பதாக இருக்கக் கூடாது என்பதில் உறுதியுடன் இருப்பதாக அவர் கூறினார். மேலும் நான்கு வருடங்களுக்கு முன்பு அவர் இரசாயனம் பயன்படுத்தி விவசாயம் செய்து வந்ததாகவும், பிறகு அதனால் மனிதன் மற்றும் விளைநிலத்திற்கு ஏற்படும் பாதிப்பை அறிந்து முற்றிலும் இயற்கை விவசாயத்திற்கு மாறியதை பற்றி விவரித்தார். பல இன்னல்கள் மற்றும் அவமானங்களை கடந்து இயற்கை வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வார் வழியில் இயற்கை விவசாயம் செய்வதாகவும், விளைச்சல் மற்றும் விலையை பொருட்படுத்தாமல் நிலையான கொள்கையுடன் தரமான பொருளை உற்பத்தி செய்வதாகவும் கூறினார். பாரம்பரிய நெல் விதைகளை இயற்கை நெல் திருவிழாவில் பெற்று பயன்படுத்தி வருகிறார்.

**உர மேலாண்மை:**

இயற்கை வேளாண்மையில் மிகவும் சவாலாக இருப்பது உரமேலாண்மை. இதனை மிகவும் நுட்பமாக இவர் கையாள்கிறார். அடியுரமாக ஆட்டு எரு, மாட்டு எரு, ஆமணக்கு புண்ணாக்கு, கடலை புண்ணாக்கு, எள்ளு புண்ணாக்கு, திரவ உரமாக பஞ்சகாவியா, ஜீவாமிர்தம், மீன் அமிலம், அமுதக்கரைசல், ஆகியவற்றை பாசன நீரில் கலந்து பயிருக்கு அளிக்கபடுகின்றது. இதன்மூலம் மண்ணிண்கடினத் தன்மை குறைந்து மண்புழுக்களின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதாக கூறினார். குறிப்பாக மீன் அமிலத்தை புதிய முறையில் தயாரிப்பதன் மூலம் மீன்கழிவுகளை விரைவில் நொதிக்க வைத்து குறுகிய காலத்தில் பயன்படுத்துகிறார். இம்முறையில் நாட்டு சர்க்கரைக்கு மாற்றாக, மாட்டு சாணத்தை பயன்படுத்தி தயாரிக்கிறார். மீன்கழிவு 10 கிலோகிராம் மாட்டு சாணம் 10 கிலோகிராம் மாட்டு கோமியம் 5 லிட்டர் ஆகிய பொருட்களை கலந்து, தினம் ஒரு குச்சியால் கிளறி விட்டு ஈ, கொசுக்கள் புகாதவாறு மூடி வைக்க 15 நாளில் மீன் அமிலம் தயாராகிவிடும்.

**பூச்சி மற்றும் நோய் கட்டுப்பாடு:**

இயற்கை பூச்சிவிரட்டி முறைகளை பயன்படுத்தி பயிரைத் தாக்கும் பூச்சிகளை கட்டுப்படுத்துகிறார். நெல் வயலில் மஞ்சள் நிற ஒட்டும் பொறி (Yellow s tickytrap), மற்றும் இனக்கவர்ச்சி பொறியை (Pheramone trap) பயன்படுத்துகிறார். மேலும் பறவைகள் மூலம் (Bird perches) பூச்சிகளை கட்டுப்படுத்துகிறார். நோய்தாக்கத்தை குறைக்க சூடோமோனாஸ் எனும் உயிரி நோய்க்கட்டுப்பாட்டு திரவத்தை பயன்படுத்துகிறார். மேலும் கற்பூரக்கரைசல் எனும் புதிய இயற்கை பூச்சிவிரட்டி சிறப்பாக பூச்சிகளை கட்டுப்படுத்துவதாகவும் அதனை தயாரிக்கும் வழிமுறையையும் கூறினார்.

**கற்பூரக்கரைசல் பூச்சிவிரட்டி தயாரிப்பு:**

வேப்பெண்ணையை நன்கு காய்ச்சி எடுத்துக் கொள்ள வேண்டும். பச்சைக் கற்பூரத்தை நன்றாக பொடியாக கலக்கவும் பிறகு பட்டை, ஏலக்காய், மஞ்சள், சுண்ணாம்பு ஆகியவற்றை தேவையான அளவு கலந்து கொள்ள வேண்டும். இறுதியாக வேப்பெண்ணை பயிர்களின் இலைகளில் ஒட்டுவதற்கு ஏதுவாக இந்த

கரைசலோடு இயற்கை அங்காடியில் கிடைக்கும் காதி சோப்பை நன்றாக கரைத்து கலந்துகொள்ள வேண்டும் 10 லிட்டர் கொள்ளளவு உடைய ஒரு தெளிப்பான் கருவியில் 50 மில்லி கற்பூரகரைசல் 9.5 லிட்டர் நீரில் கலந்து பயிர்களுக்கு தெளிக்கவும்.

**விற்பனையில் வேதனை:**

வெயில் மழை பாராமல் உடல் வருத்தி தரமாக விளைவித்த பயிருக்கு உரித்தான விலை கிடைக்காததை சொல்லி மனம் நோகிறார் விவசாயி. அறுவடை செய்த நெல் மணிகளை அரைத்து அரிசி ஆக்குவதில் சிக்கல் இருப்பதாகவும், அதன் விற்பனை வாய்ப்பு குறைவாக இருப்பதையும் கூறினார். நெல்மணிகளை அரைக்கும் ஆலைகள் மிக அதிக அளவில் மட்டுமே நெல்மணிகளை கொள்முதல் செய்து அரைத்து அரிசியாக்கி தருவதாகவும், குறைந்த பரப்பிலான நெல்மணிகளை அரைத்து தர முன்வருவதில்லை எனவும் கூறினார். மேலும் பாரம்பரிய இரகங்களை அதன் மருத்துவப் பயன்களை கருத்தில் கொண்டு பலர் அவரிடம் நேரடியாக அரிசியாக வாங்குவது அவருக்கு ஊக்கம் அளிப்பதாக தெரிவித்தார். வைக்கோலை தான் வைத்திருக்கும் மாடுகளுக்கும், ஆடுகளுக்கும் தீவனமாகப் பயன்படுத்துகிறார். கோழிவளர்ப்பிலும் ஈடுபட்டு வருகிறார்.

**அரசின் ஆறுதல் ஊக்குவிப்பு:**

இவர் செய்யும் இயற்கை வேளாண்மையின் உண்மைத்தன்மையை ஆராய்ந்து, தமிழக வேளாண்துறை மானியமாக ரூ 60,000 வழங்கி ஊக்குவித்தது. மேலும் தோட்டக்கலைத்துறை வெண்டை விதை, மிளகாய் நாற்று, கொய்யா கன்று, மாங்கன்று ஆகியவற்றை இலவசமாக வழங்கி ஊக்குவித்ததாக தெரிவித்தார். மேலும் மண்புழு வளர்ப்பு பயிற்சியளித்ததாகவும் தெரிவித்தார். இறுதியாக,

**"உதிரம் சுண்ட வெயிலில் கருகி.**
**எருவூட்டி, நீர் பாய்ச்சி,**
**பிள்ளையை போல் வளர்த்தெடுத்து**
**அல்லும் பகலும் காவல்காத்து**
**நல்லதை வேண்டி அறுத்தெடுத்து**
**ஆன பயன் கண்டு துவளாமல்**
**அடுத்த விளைச்சலுக்கு தயாராகும்**
**வேளாண்மகனின் நிலைகண்டு**
**வருத்தமுற்றோம்"**

விவசாயின் நெல் விற்பனையில் உள்ள இடர்பாடுகளை நீக்க உரிய வழிமுறைகளை வழங்கி அவரின் வெற்றிப்பாதைக்கு படிகளாய் மாற பெருமை கொண்டு உறுதியளித்து விடை பெற்றோம் கனத்த இதயத்துடன். "நாங்கள் அவரை முதன்முதலில் சந்தித்த பாதை கரடுமுரடானது, "ஆம் பாதை மட்டுமல்ல அவர் பயணமும் தான்"

என்றும் இயற்கை வழியில்
திரு.ஜெய்ணேஷ் இயற்கை விவசாயி
கண்ணாபட்டி வத்தலகுண்டு.

இப்படிக்கு
கிராம தங்கல் திட்டம் மாணவர்கள்
வத்தலகுண்டு வட்டம், திண்டுக்கல் மாவட்டம்
சுதேஸ், சுந்தர்,
சுந்தரீஸ்வரன், சுரேஷ்குமார்,
சூர்யா, வருண்குமார்,
வெங்கடேஷ், விஸ்வா,
விஸ்வநாத் ஜீவன் மகாடி.



# உதிரும் இலைகளால் விளைந்த ஓர் மாற்றம்

இயற்கை அழகு தான் எத்தனை யுகம் கடந்தாலும் அழியா வரம் பெற்ற இறைவனின் அற்புத படைப்பு!!! கடவுளின் படைப்பில் தோன்றிய எப்பொருளும் பயனற்றதன்று. மரத்தில் இருந்து உதிரும் இலைதழைகள் கூட மண்ணிற்கு வளமாக அமையும். உதிர்ந்த இலைதழைகளால் செழித்து வளர்ந்த காடுகள் கூட மனித நாகரிக வளர்ச்சிக்குப் பின் பசுமையற்றுப் போனது. உணவு அளிக்கும் மண்ணிற்கு உணவாகிய இலைதழைகள் கூட இன்று வீண் குப்பைகளான அவல நிலை ஏனோ? சராசரி மனிதன் குப்பைகள் என்று எண்ணியவையே இன்றைய நவீன உலகில் பசுந்தாள் உரம் என்று விஞ்ஞானிகளால் கருதப்படுகிறது. மனிதனின் பாரம்பரிய வேளாண் அறிவை நோக்கிய கிராம தங்கல் திட்டத்தின் கீழ் உள்ள மாணவிகளின் தேடல் இதோ.... பசுந்தாள் உரம் அல்லது பசுந்தழை உரம் இயற்கை வேளாண்மையில் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். நைட்ரஜன் போன்ற மூலப்பொருள்களை நிலஊட்டல் மூலம் மண்ணிற்கு வழங்குவதற்கு இம்முறை உதவுகிறது. செயற்கை உரங்களைப் பயன்படுத்துவதால் உண்டாகும் நீர், மண் மாசுபாடு இம்முறையால் தடுக்கப்படுகிறது. நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டத்திலுள்ள ஏமப்பள்ளி எனும் கிராமத்தில் அன்று செல்வராசு (விவசாயி) என்பவர் தோட்டத்தில் பசுந்தாள் பயிர்சாகுபடிக்கான செயல் விளக்கம் நடைபெற்றது. அந்நிகழ்ச்சியில் கிருஷ்ணசாமி (வட்டார தொழில்நுட்ப மேலாளர்), சக்திவேல் (துணை தொழில்நுட்ப மேலாளர்) மற்றும் வடிவேல் (துணைவேளாண் அலுவலர்) தலைமையில் நடைபெற்றது. மேலும் சுமார் 30 விவசாயிகள் இதில் கலந்துகொண்டனர். ஏமப்பள்ளி கிராமத்தில் விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக வேளாண் துறையின் பரிந்துரையில் தனது தோட்டத்தில் செயல் மாதிரிக்காக பசுந்தாள் பயிரான தக்கைப்பூண்டை, 75 செண்ட் நிலத்தில் பயிரிட்டார். பசுந்தாள் பற்றிய விளக்கம்: பசுந்தாள் உரம் என்பது குறுகிய கால சதைப்பற்றான இலையுடையது. பயிர் வகைத் தாவரங்கள் வளர்ந்தபின் விதைகள் உருவாகும் முன்னரே அதே வயலில் பசுந்தாள் பயிரினை மடக்கி உழ வேண்டும். பசுந்தாள் பயிர்களான அகத்தி, சணப்பு, தட்டைப்பயறு, பில்லிப்பயறு, கொத்தவரை, ஆகியவற்றை செல்வராசு என்ற விவசாயி தனது தோட்டத்தில் பசுந்தாள் பயிரான

தக்கைப்பூண்டை பயிரிட்டுள்ளார். தக்கைப்பூண்டு நார்சத்துடைய பயிராகும். மார்ச் - ஏப்ரல் மாதத்தில் விதை உற்பத்திக்கு ஏற்றதாகும். இதனுடைய விதையளவு 50 கிலோ கிராம் / ஹெக்டர். நடவு இடைவெளி 15 – 20 நாட்களுக்கு ஒருமுறை நீர்ப்பாசனம் அளிக்க வேண்டும். நடவுநட்ட நாள் முதல் 45 – 60 நாட்களில் அறுவடை செய்யவேண்டும். விதை தேர்வுக்காக பயிரிடப்பட்ட பயிர்களை 100 நாட்களுக்கு பிறகு அறுவடை செய்யலாம்.

**பயன்கள்:**

இயற்கையானது எதுவும் இழிவானதன்று. மண்ணின் அமைப்பை மேம்படுத்தும், நீர் பிடிப்பு கொள் அளவை அதிகப்படுத்தும், மண் அறிப்பினால் ஏற்படும் இழப்பைக் குறைக்கும்.மண்ணின் வீரியமிகு அமிலம், நுண்ணுயிரிகள், காற்றோட்டம் மற்றும் வடிகால் வசதி ஆகியவற்றை சரியான அளவில் மேம்படுத்தும். களர் உவர் நிலத்தில் உவர்ப்புத்தன்மையைக் குறைக்க எருக்க இலை மற்றும் சப்பாத்திக்கள்ளி போட்டு உழுவர். இதில் சப்பாத்திக்கள்ளியின் முள் விவசாயிகளின் காலில் குத்திவிடும் அபாயம் உள்ளதால் விவசாயிகள் பெரும்பாலும் இம்முறையை பின்பற்றுவது இல்லை. இதற்கு பதிலாகத்தான் பசுந்தாள் உரத்தை பயன்படுத்தி வருகின்றனர். நெல் விளையும் தாழ்நிலத்தில் பசுந்தாள் பயிரினை விளைவித்தால் அந்நிலத்திலுள்ள மண்ணின் கீழ்மட்டத்திலிருந்து மேல் பரப்பிற்கு உவர் தன்மை நகரத்தொடங்கும். பின் அந்நிலத்திலுள்ள நீரை வெளியேற்றுவதன் மூலம் அந்நிலத்திலுள்ள உவர்ப்புத்தன்மை குறையும். கரும்புடன் பசுந்தாளை ஊடுபயிராக போடும்போது கரும்பின் மகசூல் அதிகரிப்பது மட்டுமல்லாமல் உள்ளீட்டு செலவும் குறைகிறது. கரும்பாலைக்கழிவுடன் பசுந்தாளைக் கொண்டு மண்புழு உரம் தயாரிக்கும்போது நைட்ரஜன் அளவு அதிகரிக்கிறது. மாட்டுச்சாணத்துடன் பசுந்தாளைக்கொண்டு மண் புழு உரம் தயாரிக்கும்போது மண்புழுவின் இனப்பெருக்கம் அதிகரிக்கிறது. இதன்மூலம் நமக்கு வளப்படுத்தப்பட்ட மண்புழு உரம் கிடைக்கிறது. "ஒரு கல்லில் இரண்டு மாங்காய் " என்னும் வழக்குமொழிக்கு இனங்க பசுந்தாளை ஊடுபயிராக பயிர்செய்வதன் மூலம் உள்ளீட்டுச் செலவு குறைவதுடன் மண்ணின் வளமும் கெடாமல் பயிர் சாகுபடியையும் மேம்படுத்த தூண்டுகோளாக அமைகிறது. பயிருக்கு உரம் அளிக்க கூடாது, நிலத்திற்கு தான் உரம் அளிக்க வேண்டும் என்பதற்கு இணங்க, நிலத்திற்கு உணவாகவும் ஊட்டமாகவும் பசுந்தாள் உரம் அளிக்க வேண்டும். இந்நிகழ்ச்சியில் பங்கேற்ற விவசாயிகள் பசுந்தாள் பற்றிய விவரங்களை அறிந்தனர். ஒரு நிலத்தை தரிசாக விடாமல் ,அந்நிலத்தில் பசுந்தாள் உரத்தை மானாவரியாக பயிரிடுவதால் குறைந்த செலவில் மண் அரிப்பை தடுப்பதோடு மட்டுமின்றி மண்ணின் இயற்கை வளமும் பராமரிக்கப்படுகின்றது என்ற உண்மையை விவசாயிகளிடம் ஆழமாக எடுத்துரைத்தோம். இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சியில் பங்கேற்ற விவசாயி ஒருவர் ஊக்கமடைந்து தனது தேட்டத்தில் பசுந்தாள் பயிரினை ஊடுபயிராக பயிரிட்டார். இதனை காணும் மற்ற விவசாயிகளிடம் மாற்றம் ஏற்படும் என்ற நம்பிக்கையுடன் தொடர்வோம்...... விதைத்துக்கொண்டே இரு... முளைத்தால் மரம்! இல்லையேல்!!! உரம்...

இப்படிக்கு, திருச்செங்கோடு குழு,
கிராம தங்கல் திட்டம் மாணவர்கள்
திருச்செங்கோடு வட்டம், நாமக்கல் மாவட்டம்
லாவண்யா, மதிவதனி,
மதுமித்ரா, மனோமித்ரா,
நந்திதா, நிலா,
நிவேதா ஸ்ரீ, நிவிதா,
பவித்ரா, பூங்குழலி.